# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 20. தொலைபேசி 23411

வள்ளுவர் ஆண்டு 2002, தை 13 உ (26-1-71) செவ்வாய் துல்கஃதா பிறை 28 புத்தகம் 25 இதழ் 11



முக்கிய அறிவித்தல்

1971ம் ஆண்டுக்குரிய கலண்டரை 31-1-1971 ம் திகதிக்கு முன்னதாக பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு பகுதியை அனுப்பி பெற்றுக்கொள்ளும்படி அறியத்தருகின்றோம்.

1. 50 மில்க் வைற் நீல சோப் மேலுறைகள்,
2. 10 பார் சோப் மேலுறைகள்.
3. 10 சலவைப் பவுடர் மேலுறைகள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை,
த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.


# தமிழ் இலங்கையில் சுதந்திர தினம்

# பகிஷ்கரிப்பு!

தமிழ் பேசும் மக்களுக்கு அரசு இழைத்து வரும் அநீதிகளை எதிர்த்தும், புதிய அரசியலமைப்பிலும் சிங்களம் மட்டும் சட்டத்தையும் சிங்கள ஒற்றையாட்சித்திட்டத்தையும் தமிழ் பேசும் மக்கள் மீது திணித்திட அரசு தீர்மானித்துள்ளதைக் கண்டித்தும், தமிழ் இலங்கையில் சுதந்திரதினக்கொண்டாட்டங்கள் இம்முறை பகிஷ்கரிக்கப்படலாமெனத் தெரியவருகிறது!


தமிழ்பேசும் மக்கள் தமிழ் பிரதேசங்களில் ஆட்சியாளர் எடுக்கும் சுதந்திர தின விழா நிகழ்ச்சிகளிலும், கொண்டாட்டங்களிலும் பங்கு கொள்ளாது பகிஷ்கரிக்கவேண்டுமென்றும் தமிழ் பாடசாலை மாணவ மாணவிகளை சுதந்திர தின விழாக்களில் பங்கு பற்ற விடாது பெற்றோர்கள் தடுத்திட வேண்டுமென்றும், தமிழ் பகுதிகளிலுள்ள பல்வேறு இளைஞர் பேரவைகளும், வாலிப முன்னணிகளும், மற்றும் பொது மன்றங்களும் கோரிக்கை விடுத்துள்ளன:

தமிழ் பிரதேசங்களில் நடைபெறும் சுதந்திரதின விழாவெதிலும் தமிழரசு பா: உ.க்கள் பங்குபற்றமாட்டார்கள் என்றும், அவற்றைப் பகிஷ்கரிப்பர் என்றும் காவலூர் பா.உ. பண்டிதர் கா.பொ. இரத்தினம் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்:

'1966ம் ஆண்டு தமிழுக்கு கிடைத்த அற்ப சொற்ப உரிமைகளைக் கூட இல்லாமல் செய்ய முயற்சி நடக்கிறது. ஒற்றையாட்சி சிங்கள ஏகாதிபத்தியம் தமிழ் மக்கள் மீது

(2-ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வழக்கில் அழகக்கோன் வெற்றி!



மன்னார் பா.உ. திரு வீ.ஏ. அழகக்கோனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த தேர்தல ஆட்சேபனை வழக்கு இம்மாதம் 20-ம் திகதி தள்ளுபடி செய்யப்பட்டது.

தகுந்த காரணங்கள் காட்டப்பட்டாலோ அன்றி தேர்தல் அதிகாரி தவறு விட்டதாக நிரூபிக்கப்பட்டாலோவாக்குகள் திருப்பி எண்ண வேண்டுமென்றும் ஆனல் இவ்வழக்கில் இதற்குதகுந்த காரணங்கள் காட்டப்படாததனல்வாக்குச் சீட்டுக்கள் திரும்ப எண்ணப் படவேண்டுமென்ற கோரிக்கையை நிராகரிப்பதாகவும் நீதியரசர் திரு. வின்சன்ட் தாமோதரம் தமது தீர்ப்பில் கூறியுள்ளார்.

## அண்ணாவின் இறுதியாத்திரைக் காட்சிக்கு கொழும்பில் தடை!

### தகவல் அமைச்சரின் சர்வாதிகாரம்!

பேரறிஞர் அண்ணா அவர்களின் இறுதி யாத்திரையை சித்திரிக்கும் திரைப் படத்தை கொழும்பில் திரையிடுவதற்கு தகவல் அமைச்சினால் தடையுத்தரவு விதிக்கப்பட்டிருக்கிறது.




கொழும்பு செயின்ஸ்தான் தியேட்டரில் இம்மாதம் 23ம் திகதி அண்ணாவின் இறுதியாத்திரைத் திரைப் படக்காட்சி காட்டப்படுவதாக பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப் பட்டிருந்தது. தமிழ் மக்கள் நெஞ்சங்களிலெல்லாம் நிறைந்திருக்கும் அண்ணாவின் இறுதி யாத்திரையை நேரில் காணமுடியாத மக்கள், திரைப்படத்திலாவது கண்டு அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்திடலாமென்ற ஆசையில் அன்று செயின்ஸ்தான் தியேட்டரை முற்றுகையிட்டனர். அண்ணாவின் இறுதிக் காட்சி வரும்வரும் என ஆவலோடு திரையைப் பார்த்தபடி காத்து இருந்த மக்களுக்கு

(2-ம் பக்கம் பார்க்க)

## உங்களுக்கு புரிகிறதா?

இதற்கும் தமிழுக்கும்



என்ன சம்பந்தம்

புரியாவிட்டால் 6ம் பக்கம் பாருங்கள்!

## குமாரசூரியரே திரும்பிப்போ! சாவகச்சேரியில் எதிர்ப்பு!

கடந்த 15ம் திகதி அதாவது தைப்பொங்கலுக்கு மறுநாள் சாவகச்சேரியில் தேசிய லொத்தர் சபை ஆதரவில் தினசரி அதிர்ஷ்ட லாபச் சீட்டு இழுப்பு நடைபெற்றது. அவ் வைபவத்தில் அமைச்சர் குமாரசூரியரும் கலந்துகொள்வதாக இருந்தார். ஆனல் இறுதி நேரத்தில் அவர் வராமல் விட்டுவிட்டார்.

அமைச்சர் குமாரசூரியர் வருவதை முன்னிட்டுப் போலும் சாவகச்சேரியில் பல இடங்களில் பெரிய எழுத்துக்களில் அவருக்கு எதிரான சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன. குறிப்பாக பஸ் நிலையத்துக்கு முன்னு

(2-ம் பக்கம் பார்க்க

## அமைச்சருக்கு அளித்த விருந்தில் குடிவகையும் பரிமாறப்பட்டதா?

அண்மையில் ஊர்காவற்றுறைக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர்ஒருவருக்கு அளிக்கப்பட்ட இராப்போசன விருந்தின் போது குடிவகைகளும் பரிமாறப்பட்டனவா? இப்படியொருகேள்வியைத் தமிழ் மக்கள் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

அமைச்சருக்கு தீவுப்பகுதி ஐக்கிய சோசலிச முன்னணியினரால் அளிக்கப்பட்ட குறிப்பிட்ட விருந்தின்போது பிடிக்கப்பட்ட படம் ஒன்று தினகரன் 21-1-70 இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இப்படத்தில் சாப்பாடு மேசையைச் சுற்றி அமைச்சரும், வீ. பொன்னம்பலமும், மற்றும் சில ஐக்கிய முன்னணி எடுபிடிகளும் அமர்ந்திருக்க காணப்படுகிறார்கள். மேசையில் சோடாப் போத்தல்களுடன் மேல் நாட்டு குடிவகைப் போத்தல்கள் சிலவும் காணப்படுகின்றன. இந்தக் காட்சியே தமிழ் மக்கள் மனதில் மேற் கண்ட கேள்வி எழுவதற்கு காரணமாகும்.

அமைச்சருக்கு அளிக்கப்பட்ட விருந்தில் குடிவகை பரிமாறப்பட்டிருப்பது உண்மையானல் அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கை, சோசலிசம் என்பதெல்லாம் வெறும் ஊருக்கு உபதேசம் தானு? அமைச்சர்களுக்கு குடிவகை கொடுத்து தமிழினத்தின் தன்மானத்தை விலைகூறி விற்கத் துணிந்து விட்டனரா ஐக்கிய முன்னணியின் தமிழ்பகுதி சாத்தான்கள்?

—இவ்வாறெல்லாம் தமிழ் மக்கள் ஆத்திரத்துடன் கேட்கிறார்கள்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## அடிப்படைத் தீர்மானங்கள் தமிழனின் அடிமைச் சாசனம்!

புதிய அரசியல் திட்டத்துக்கான வரைவு அடிப்படைத் தீர்மானங்களை அரசியல் திட்ட விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வா சமர்ப்பித்திருக்கிறார்; இத் தீர்மானங்களுக்கு திருத்தங்கள் கொண்டுவரலாமென்றும் அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

அமைச்சரின் இந்த அறிவிப்பு வெறும் கண்துடைப்பு என்பதும் அடிப்படைத் தீர்மானங்களில் ஓர் எழுத்துக்கூட மாற்றப்படப்போவதில்லையென்பதும் அமைச்சரின் பேச்சிலிருந்தே ஐயந்திரிபறத் தெரிகிறது:

''அடிப்படைத் தீர்மானங்கள் அனைத்தும் ஐக்கிய முன்னணி அரசின் கொள்கைக்கிணங்கவே தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இத்தீர்மானங்களுக்கு கொண்டு வரப்படும் திருத்தங்கள் எதுவும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கொள்கைக்கு முரண்பட்டதாக இருக்காது என்பதை அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்கள் மனதில் வைத்திருக்கவேண்டும்.''

என்று கூறியிருக்கிறார் டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வா. அமைச்சரின் இக்கூற்றிலிருந்தே அடிப்படைத் தீர்மானங்களில் எதுவித முக்கிய மாற்றத்தையும் அரசு செய்யப்போவதில்லையென்பது தெளிவாகிவிட்டது.

ஆம், புதிய அரசியலமைப்பிலும் சிங்கள ஏகாதிபத்திய ஒற்றையாட்சி அமைப்பே தொடர்ந்து நீடிக்கப்போகிறது!

தமிழ்பேசும் மக்கள் இந்நாட்டில் ஆளப்படுவோராகவும் சிங்கள மக்கள் ஆள்வோராகவும் இன்று இருக்கும் அடிமை நிலையே மேலும் தொடரப்போகிறது! இன்னும் சொல்லப்போனல் ஆங்கில ஆதிபத்தியத்தின் கடைசி தொடர்பும் துண்டிக்கப்பட்டு சர்வசிங்கள ஏகாதிபத்தியம் தமிழ்பேசும் மக்கள் மீது திணிக்கப்படப்போகிறது!

நாட்டின் ஒரே ஆட்சிமொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் சிங்களம் மட்டுமே கோலோச்சவிருக்கிறது. தமிழ் மொழி உரிமையற்ற அடிமைமொழியாக — அனாதையாக ஆதரவற்ற மொழியாக தொடர்ந்தும் சாக்கடையிலேயே கிடக்கப்போகிறது!

இந்நாட்டிலுள்ள இந்து கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களுக்கு இல்லாத உரிமையும் சலுகையும் பௌத்தமதத்துக்கு அளிக்கப்பட்டு, பௌத்தம் மட்டும் அரசாங்க மதம் என்ற நிலை தோற்றுவிக்கப்படவிருக்கிறது!

இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்கள் தொடர்ச்சியாக கடந்த பதினைந்து ஆண்டுகாலமாக விடுத்துவரும் இணைப்பரசுக் கோரிக்கையை அரசியல் திட்ட விவகார அமைச்சர் ஏறிட்டுப் பார்க்க மறுத்ததுடன் தமிழ் பிரதேசங்களின் பாதுகாப்புக்கு வேறு வேறு மாற்றுத் திட்டம் எதையும் அடிப்படைத் தீர்மானங்களில் குறிப்பிடவும் தவறிவிட்டார்!

சுருக்கமாகக் கூறினல் இந்நாட்டில் தமிழ்பேசும் மக்களுக்கெனத் தனிப்பிரதேசம்; தனித்துவமான அரசியல் அமைப்பு எதுவும் இருக்கக் கூடாதென்பதுதான் சிங்கள அரசாங்கத்தின் ஒரே நோக்கமாகும்.

பண்டாரநாயகாவின் கொள்கைகளைப் பின்பற்றுவதாக கூறிக்கொள்ளும் ஆட்சியாளர்கள், சிறுபான்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பண்டாரநாயகா ஏற்றுக்கொண்ட பண்டா-செல்வா ஒப்பந்த அம்சங்களைக்கூட அரசியல் திட்டத்துக்கான அடிப்படைத் தீர்மானங்களில் சேர்த்துக்கொள்ள முன்வரவில்லையென்பது இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

இந்நிலையில் தமிழரசுக் கட்சியினர் வழிமுறைக் குழுவிலும் அரசியல் நிர்ணய சபையிலும் திருத்த தீர்மானங்களை கொண்டுவருவதால் பயனேற்படுமா? என்று சிலர் வாதிடலாம்.

திருத்தத் தீர்மானங்களை தமிழரசுக் கட்சியினர் கொண்டுவருவது அரசாங்கம் அவற்றை தாராள மனத்துடன் ஏற்றுக்கொள்ளும் என்ற அசட்டு நம்பிக்கையாலல்ல; அப்படி நம்புவதற்கு தமிழரசுக்கட்சியினர் அரசியல் பேதைகளுமல்லர்.

ஆனல், இந்நாட்டுச் சிறுபான்மை மக்களான தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகள் இவைதான் என்பதையும் அக்கோரிக்கைகளை ஏற்க மறுக்கும் ஆட்சியாளரின் குறுகிய சிங்கள வெறியையும் உலகம் அறிந்திடச் செய்யவேண்டுமென்பதற்காகத்தான் தமிழரசுக்கட்சியினர் திருத்தப் பிரேரணைகளைக் கொண்டுவருகின்றனர்.

தமிழரசுக் கட்சியார் அரசியல் நிர்ணய சபையில் இன்னும் ஏன் இருக்கவேண்டும்? உடனே வெளியேறினல் என்ன என்றும் சிலர் கேட்கின்றனர்! இதுவும் சரியான யோசனையாக நமக்குத் தோன்றவில்லை.

தமிழரசுக் கட்சியினர் வெளியேறினல் புதிய அரசியல் திட்டம் எதிர்ப்பின்றி—வாக்களிப்புக்கூட இன்றி நிறைவேறுவதற்கு வசதிசெய்து கொடுத்தவர்களாகிவிடுவோம். அதுமட்டுமன்றி தமிழரசார் வெளியேறினல் அரசாங்கத்துக்கு இன்று ஆதரவு அளித்துவரும் தமிழ்த் துரோகிகள் புதிய அரசியல் திட்டப் பிரச்சினையில்-எங்கு நிற்கிறார்கள் என்பதை தமிழ் மக்கள் அடையாளம் கண்டுகொள்வதும் துர்லபமாகிவிடும்.

எனவே புதிய அரசியல் திட்டத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சியினர் வாக்களித்துவிட்டு அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறுவதுதான் புத்திசாலித்தனமானது என்பதே நமது கருத்தாகும்.

அரசியல் நிர்ணயசபையிலிருந்து வெளியேறுவதிலிருந்துதான் ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் புதிய வேகத்தை புதிய விறுவிறுப்பை அடையவிருக்கிறது.

# சமஷ்டி, சம அந்தஸ்து, தமிழில் நீதிமன்ற நடவடிக்கைகள்!

## தமிழரசாரின் திருத்தப் பிரேரணைகள்!

- இலங்கை ஓர் இணைப்பாட்சிக் குடியரசாக இருத்தல் வேண்டும்.
- இலங்கையின் அரசகரும மொழியாக சிங்களமும் தமிழும் இருத்தல் வேண்டும்.
- பௌத்தம், இந்து சமயம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களை பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாதல் வேண்டும்.
- எல்லாச் சட்டங்களும் சிங்கள மொழியிலும், தமிழ் மொழியிலுமிருத்தல் வேண்டும்.
- இலங்கையெங்கணும் நீதிமன்றங்களினதும், நீதி பரிபாலனம் செய்வதற்கு சட்ட மார்க்கமாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள நியாய சபைகளினதும் மொழிகள் சிங்களமும் தமிழுமாதல் வேண்டும்.
- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்களினதும் நீதி பரிபாலனம் செய்வதற்கு சட்டமார்க்கமாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள நியாய சபைகளினதும் மொழி தமிழாக இருத்தல் வேண்டும் அதன் பிரகாரம் அந்த நீதிமன்றங்களிலும் நியாய சபைகளிலும் கையாளப்படும் வழக்குரைகள், நீதிமன்ற நடவடிக்கைகள் தீர்ப்புக்கள், கட்டளைகள், என்பனவும். நீதிமுறைச் செயல்கள் சட்ட நிறைவேற்றம் சார்ந்த செயல்கள் என்பன பற்றிய பதிவேடுகளும் உட்படவுள்ள அவற்றின் பதிவேடுகள் இவ்விரு மாகாணங்களிலும் தமிழ் மொழியில் இருத்தல் வேண்டும். அப்பீல் நீதிமன்றங்களும், உயர் நீதிமன்றங்களும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடமையாற்ற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
- சட்டவாக்கங்களை சிங்கள மொழியிலும், தமிழ் மொழியிலும் வெளியிடுவதற்கு பொறுப்பளிக்கப்பட்ட ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும்.
- அடிப்படைத் தீர்மானங்களில் பிரஜைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் எல்லாம் மக்கள் என்று மாற்றப்பட வேண்டும். (பிரஜைகள் என்ற சொற் பிரயோகத்தினல் இந்நாட்டில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவரும் 'நாடற்ற' மக்கள் பாதிக்கப்படாமலிருப்பதற்கே இத்திருத்தம்.)

மேற்கண்ட திருத்தங்களை அரசியல் அமைப்பு அடிப்படைத் தீர்மானங்களுக்கு கொண்டு வருவதென்று தமிழரசுக்கட்சி முடிவு செய்துள்ளது.

ஸ்ரீலங்கா என்று அடிப்படைத் தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் எல்லாம் இலங்கை என்று தமிழில் மாற்றியமைக்கவேண்டும் என்றும் தமிழரசுக் கட்சியினர் வலியுறுத்துவார்கள்.

இத் திருத்தங்கள் தமிழிலேயே அரசியல் திட்ட அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

## தமிழ்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசியலமைப்பிலும் திணிக்கப்படவிருக்கிறது. பல்கலைக்கழகப் பிரவேசத்தில் தமிழ் மாணவர்கள் இன மொழி அடிப்படையில் ஒதுக்கித் தள்ளப்பட்டுவிட்டனர். தென்னபிரிக்காவை விட கொடிய இன ஒதுக்கல் இங்கு நடைபெறுகிறது. இந்நிலையில் தமிழ்மக்களுக்கு சுதந்திர விழா ஒரு கேடா'?

இவ்வாறு பண்டிதர் மேலும் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் கோணை நகர்த்தமிழணி இயக்கம் சுதந்திர தின பகிஷ்கரிப்பு இயக்கத்தில் முன்னணியில் நின்று செயலாற்றும் என்று அறியப்படுகிறது.

தமிழரசு வாலிப முன்னணியும் சுதந்திரதினத்தைப் பகிஷ்கரிக்கும்படி தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக்கொள்ளவிருக்கிறது.

## அண்ணாவின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியில் பெருத்த ஏமாற்றமே கிடைத்தது.

அண்ணாவின் இறுதி யாத்திரை கடைசிவரை காட்டப்படவேயில்லை. இதன் காரணத்தை தியேட்டர் மனேஜரிடம்கேட்டபோது தகவல் அமைச்சரின் நேரடி உத்தரவின் மீதில் அண்ணாவின் திரைப்படம் காட்டக் கூடாது என்று கடைசித் தருணத்தில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதென்ற உண்மை தெரிய வந்தது.

அண்ணாவின் இறுதியாத்திரையை கண்டு கண்ணீர் உகுத்து அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்திடச் சென்ற தமிழ் மக்கள் ஆத்திரமடைந்த நெஞ்சத்துடன் திரும்பினர்.

''அண்ணாவின் இறுதியாத் திரைப்படம் யாழ்ப்பாணத்தில் திரையிடப்பட்டது; அங்கு தடைசெய்யப்படவில்லை. அப்படியிருக்க கொழும்பில் தடை செய்யப்பட்டது ஏன்? இங்குள்ள தமிழர் அண்ணாவின் படத்தை பார்க்கக் கூடாதா? தகவல் அமைச்சரின் இச்செயல் தமிழ் உள்ளங்களில் வேலைப் பாய்ச்சி விட்டது! இத் தடையை நீக்க தமிழ் எம். பீக்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

—இவ்வாறு படம் பார்க்கச் சென்று ஏமாறி கொதிப்பேறிய உள்ளத்துடன் திரும்பிய தமிழன்பர் ஒருவர் குறிப்பிட்டார்.

## 'மருமகனுக்கு வேலை கேட்டவர் தமிழரசு பா. உ. அல்ல' தினகரன் குட்டு உடைந்தது!

தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது மருமகன் சிங்களம் படித்திருப்பதாகவும் அவருக்கு வேலை தரும்படியும் தன்னிடம் கேட்டதாக விளையாட்டுத்துறை அமைச்சர் கே. பி. இரத்னயகா வட பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்தபோது ஒரு கூட்டத்தில் கூறியதாக தினகரன் செய்தி வெளியிட்டிருந்ததல்லவா?

இது பற்றி 23-1-71-ல் பாராளுமன்றத்தில் பண்டிதர் இரத்தினம் பிரஸ்தாபித்து யார் அந்த பா. உ. என்பதை வெளியிடும்படி அமைச்சரிடம் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் தாம் தமிழரசுக் கட்சி பா. உ. என்று கூறவில்லையென்றும் ஒரு தமிழ் பா. உ. என்றே கூறியதாகவும் பதிலளித்து 'தினகரனின் குட்டை உடைத்துவிட்டார். (இது பற்றிய முழு விபரம் அடுத்த வாரம் இடம்பெறும்)

## காங்கேசன்துறை வாலிபர்களுக்கு செல்வா சேதி!

''காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் உள்ள காலி இடங்களில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் பயிற்சி அளிக்க 12 இளைஞர்களை சிபாரிசு செய்யுமாறு கைத்தொழில் அமைச்சு என்னிடம் கோரியுள்ளது. எனவே இது சம்பந்தமாக என்னேடு தொடர்பு கொள்ள விரும்பும் காங்கேசன்துறைத் தொகுதி இளைஞர்கள் 1-2-71ம் திகதி காலை 9 மணிக்கு தெல்லிப்பழையிலுள்ள எனது இல்லத்தில் சந்திக்கலாம்''

—இவ்வாறு தமிழரசுத் தந்தை செல்வநாயகம் பா. உ. அவர்கள் சுதந்திரனுக்கு [illegible] தில் கூறியுள்ளார்.

## குமாரசூரியரே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள டிறிபேக் கல்லூரி சுவரில் ''கைகூலியே திரும்பிப்போ'' ''குமாரசூரியரே திரும்பிப்போ'' ''உனக்கு வரவேற்பில்லை போ'' என்று தடித்த எழுத்துக்களினல் எழுதப்பட்டிருந்தது. 14ம் திகதி இது எழுதப்பட்டதினல் 15ம் திகதி மாலை வரையில் இது மக்கள் பார்வையில் இருந்தது. மக்கள் பார்த்துவிட்டு சிரித்தவண்ணம் சென்றனர்.

பின்னர் 15ம் திகதி மாலை அமைச்சரின் வருகையை முன்னிட்டு இதை அழிப்பதற்கு சிலரால் முயற்சி எடுக்கப்பட்டது. எனினும் மை பூரணமாக அழியவில்லை. இப்போதும் அந்த எழுத்துக்கள் தோற்றமளித்துக் கொண்டிருக்கின்றன. குமாரசூரியரும் சீட்டிழுப்பில் கலந்துகொள்ளாததைக் கண்ட மக்கள் அவர் பயந்துதான் வரவில்லை என்று கூறிக்கொண்டு சென்றனர்.

குமாரசூரியருக்கு பதிலாக தியாகராசா, அருளம்பலம் என்போர் சீட்டிழுப்பில் கலந்துகொண்டனர் எவ்வளவுதான் பிரச்சாரம் செய்தும் அதிகமான மக்கள் வைபவத்தில் கலந்துகொள்ளவில்லை. வெறும் வாங்குகளுக்கு முன்னல்தான் தினசரி அதிர்ஷ்டலாபச் சீட்டு இழுப்பு வைபவம் நடந்தேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் சட்டத்தைத் தீயிடுவோம்!
# அடிமைத்தளை அறுக்க களம் காண்போம்!

அன்பு நண்பா,

விருந்து ஒன்று காண உன்னை அழைக்கின்றேன்; என்னுடன் வருகிறாயா?

தமிழுக்கும் தமிழினத்துக்கும் ஆபத்து சூழ்ந்துள்ள இன்றைய நிலையில் விருந்தென்ன வேண்டிக்கிடக்கிறது: நீ இப்பொழுது தான் அரசாங்க விருந்தினராகப்போய் திரும்பியிருக்கிறாயே — அது போன்றதோர் வாய்ப்பினை அல்லவா ஆவலுடன் நாள்தோறும் எதிர்பார்த்திருந்திடுகின்றேன்; இந்நிலையில் விருந்துகளில் வீண்பொழுது போக்கிடலாமா; நீயா என்னை விருந்துக்கு அழைத்திடுகிறாய் என்று நீ வாய்திறந்து கேட்டிடாவிடினும் உன் உள்ளம் கேட்டிடுவது எனக்குப் புரிகிறது!

ஆமாம் நண்பா, விருந்துக்குத்தான் உன்னை அழைத்திடுகிறேன்; விருந்து என்றால் சாமானிய விருந்து கூட அல்ல; அறுசுவை உண்டி; பதினாறுபச்சடி; சம்பா அரிசிச்சோறு; சோற்றில் கைபட்டவுடனே சுவையான நெய் மணம்; தாளித மணமோ பசியை இரட்டிப்பாக்குகிறது; கட்டித்தயிர் வெள்ளிக்கிண்ணத்தினில்; பாதம் பருப்புடன் பாயாசம்; கனிவகைகள் ஒருபுறம்; கருப்பஞ்சாறு மறுபுறம்; இவைகளைக் கேட்டவுடனே உனக்கு நாக்கில் நீர் ஊறுகிறது அல்லவா? நான்தானே முதலில் கூறிவிட்டேன்—உன்னை அழைத்தது விருந்து உண்ண அல்ல; விருந்து காண!

இந்த விருந்திலே உட்கார்ந்து வயிறு புடைக்க உண்ணுகிறான் ஒருவன்; வயிறு நிரம்புகிறது; புளியேப்பம் வருகிறது; புளியேப்பம் எடுத்தவாறே வெளியே வராந்தாவுக்கு வருகிறான்-பொழுது போக்கிட; காற்றாட; வாயில் வெற்றிலையை குதப்பியபடி!

## புளியேப்பத்தில் பிறந்ததத்துவம்

எதிரே ஆலமரம் ஒன்று; அதன் நிழலிலே ஏழையொருவன்; கடும்பசி அவனுக்கு; கை நிறைந்த செல்வத்துடன் ஒரு காலத்தில் வாழ்ந்தவன் தான் அவன்; காலத்தின் கொடுமை அவனுக்கு தந்திட்ட கோலமிது!

அந்த ஏழையை காண்கிறான் விருந்துண்டு புளியேப்பம் விடுபவன்; அவனிடம் சென்று, 'என்னப்பா செய்வது—பட்டினி கிடந்து பாரினில் செத்தவனில்லை; படைத்தவன் 'படி' அளக்காமலா போவான்; நீ பட்டினி கிடப்பினும் சாகமாட்டாய்; அஞ்சாதே! என்று தனது வயிற்றைத் தடவியபடி கூறுகிறான் என்றால் அவனைப்பற்றி என்ன எண்ணிடத் தோன்றும்!

பசியில்லை அவனுக்கு; வயிறு புடைக்க உண்டு விட்டான்; கவலையேதுமில்லை; அதனால் இப்படித் தத்துவம் பேசுகிறான்; பசித்தவன் நிலையில் இவனிருப்பின் இப்படி 'தத்துவம்' பேசிடுவானோ என்று கேட்டிடுவாய் நண்பா! இப்படி வயிறு புடைக்க தின்று விட்டு புளியேப்பம் விட்டபடி—பசித்த வயிற்றுடன் இருக்கும் ஏழையின் முன் 'தத்துவம்' பேசிடும் ஒருவனைத்தான் என்னால் கற்பனை செய்து பார்த்திட முடிந்தது—சென்ற கிழமை யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத்துறை அமைச்சரான கே. பி. இரத்நாயகாவின் உரையொன்றினைப் படித்திட்ட போது!

'இலங்கையிலும் சரி உலகின் வேறெந்த நாட்டிலும் சரி ஒரு இனம், இன்னொரு இனத்தின் மொழியை அழித்துவிட முடியாது. தமிழை சிங்களவர் அழித்து விடுவார்கள் என்று கூறுகிறார்கள். எந்த மொழியையும் அழிக்க முடியாது. அழிக்க முயன்றாலும் அம்மொழி வளருமே தவிர அழியாது'

—இவ்வாறு விளையாட்டுத்துறை அமைச்சர் தெல்லிப்பழையில் ஒரு கூட்டத்தில் கருத்துத் தெரிவித்திருக்கிறார். அமைச்சரின் 'இந்த உரையை'ப் படித்திட்டபோது தான் 'தத்துவம்' போதித்த புளியேப்பக்காரனின் கதை எனக்கு நினைவுக்கு வந்தது!

## விடுதலைப்பசி தமிழினத்துக்கு!

ஈழத்தின் ஆட்சி மொழியாக சிங்கள மொழி 1956ம் ஆண்டு அரியணையிலேறி விட்டது! அதனால் சிங்கள மொழிக்கு புது வலிவும் பொலிவும் இன்று கிடைத்திருக்கிறது. அரசியல் துறையிலும் மற்றும் துறையிலும் ஆதிக்கம் சிங்களத்துக்கு என்ற நிலையேற்பட்டு விட்டது! தனது தாய் மொழியாம் சிங்களத்துக்கு இவ்வளவு பாதுகாப்பினையும் நாட்டு நிர்வாகத்தில் பெருமைக்குரிய இடத்தினையும் பெற்றுக் கொடுத்துவிட்டு, அந்த மகிழ்ச்சியில், நிம்மதி நிலையில் இளைத்தபடி 'புளிச்சல் ஏப்பக்காரன்' நிலையிலிருக்கும் கே. பி, இரத்நாயகா தான், தமிழ் மொழியின் உரிமைக்காக—தாய் மொழியின் வாழ்வுக்காக போராடிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களிடம்—விடுதலைப் பசியுடன் வாடும் தமிழனிடம் — சென்று மொழியை அழிக்க முடியாது என்று தத்துவ உபதேசம் செய்து விட்டு திரும்பியிருக்கிறார்!

## தமிழ் மக்கள் மூடர்களா?

மொழி அழியாது என்று தமிழ் மக்களுக்கு தத்துவமுரைத்திடும் அமைச்சர், உண்மையிலே அத்தத்துவத்தில் நம்பிக்கையுடையவராயிருந்திடின் சிங்கள மக்களிடமல்லவா அதை எடுத்துரைத்திட வேண்டும்? சிங்கள மக்களே! மொழியை அழித்திடயாராலும் ஆகாது; வேண்டாம் உங்களுக்கு வீண் அச்சம்; தமிழ் மொழிக்கும் சிங்கள மொழியுடன் சம உரிமை கொடுத்து ஆட்சிமொழியாக்கிடுவோம்; என்றன்றோ கூறிடவேண்டும்; தமிழுக்கும் அரசாங்க மொழி என்ற நிலை பெற்றுத்தந்திடவன்றோ உழைத்திட வேண்டும்!

அதை விடுத்து—1966ம் ஆண்டு சனவரி 8ம் நாள் முந்திய அரசு தமிழுக்கு தந்திட்ட சில பல உரிமைகளைக்கூட பறித்திடும் நோக்குடன் செயல்படும் ஆட்சியின் அங்கமாக விளங்கிடும் அமைச்சர் தமிழ் மக்களுக்கு 'மொழி அழியாது; எனவே மொழிக்காக போராடாதீர்' என்று 'புத்திமதி' கூறுகிறார் என்றால்

## அரசியல் மேடை

தமிழ் மக்களை வெறும் மூடர்கள் என்று அவர் கருதுகின்றார் என்பதுதான் பொருள்!

தமிழ் மொழிக்கு இனி இந்நாட்டில் எவ்வித உரிமையும் தரமாட்டோம்; சிங்களமே நாட்டின் ஒரே ஆட்சி மொழி; தமிழ் வேண்டுமானால் சிங்களத்தின் குற்றேவல் மொழியாக இருந்து விட்டுப் போகட்டும் என்பதுதான் அமைச்சர் கூறியிருப்பதன் கருத்து!

## கருத்தே முக்கியம்

அமைச்சர்கள் யாழ்ப்பாணத்தில் தமிழில் பேசியதாக தினசரி ஏடுகள் போற்றிப் புகழ்கின்றன. எப்படியிருப்பினும் அமைச்சர் கே. பி. இரத்நாயகா போன்றோர் உண்மையில் நல்லவர்கள் தாம்; இல்லாவிடின் தமிழிலே பேசியிருப்பரா என்று தமிழர் சிலரும் பெருமையுடன் பேசிடக் கூடும்!

நண்பா, வெட்டுவதற்கு கொண்டு செல்லப்படும் ஆடு, கசாப்புக்கடைக்காரன் கையில் வைத்திருக்கும் கத்தியின் பளபளப்பைப் பார்த்து ''ஆகா, என்ன அழகு, என்ன ஜொலிப்பு' என்று மயங்குவதால் ஆட்டுக்கு என்ன இலாபம்? அதுபோல அமைச்சர்கள் தமிழிலே சுவையாக பேசுகிறார்கள் என்பதல்ல; என்ன கருத்தினைக் கூறுகிறார்கள் என்பதுதான் முக்கியமானது.

## ஏகாதிபத்திய வாதிகளின் சூழ்ச்சி

ஒரு இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்திட விரும்பும் ஏகாதிபத்தியவாதிகள் அந்த இனத்தின் மொழியைப் பயின்று அவர்களது மொழியிலேயே பேசி அம்மொழி பேசும்மக்களிடையே எட்டப்பர்களை உருவாக்குவதும் அவ்வினத்தினரிடையே பிளவுகளை மூட்டுவதும், அவ்வினத்தின் விடுதலைக்காகப் போராடும் இயக்கத்தவர்களுக்கு எதிராக பகை மூட்டிடுவதும் உலக வரலாற்றில் நாம் அறியாததொன்றல்ல—அந்தச் சூழ்ச்சியையே இன்றும் சிங்கள ஏகாதிபத்திய அமைச்சர்கள் இப்பொழுது பின்பற்றத் தொடங்கியிருக்கிறார்கள். இச்சூழ்ச்சி வலையில் ஈழத் தமிழினம் ஒருபோதும் சிக்காது என்பதை அமைச்சர்கள் புரிந்துகொண்டிட வேண்டும்!

நண்பா, அமைச்சர்கள் தமிழ்ப் பகுதிக்கு செல்லும் போதெல்லாம் சிரித்துச் சிரித்துப் பேசினர்; மக்களுடன் நெருங்கி அளவளாவினர்; எளிமையுடன் காணப்பட்டனர்; இனிக்க இனிக்க உரையாடினர் என்றெல்லாம் அமைச்சர்களுக்கு இந்நாட்டு ஏடுகள் விதம் விதமான 'போஸ்களில்' படம்போட்டு தந்திடும் விளம்பரங்களைப் பார்த்திடும்போது சின்ன வயதில் படித்திட்ட ஆங்கிலக் கவிதையொன்றுதான் என் நினைவுக்கு வருகிறது!

Yet each man kills the thing beloves
By each let this be heard

Some do it with a bitter look
Some with a flattering word
The coward does it with a kiss
The brave man with a sword!

'ஒவ்வொரு மனிதனுக்கும் கொலை செய்வது தான் அடிப்படை நோக்கம்; சிலர் இதை கசப்பான பார்வையுடன் செய்கிறார்கள்; சிலர் புகழ்ந்துரையால் ஆளை மயக்கி தமது காரியத்தை முடிக்கிறார்கள்; வேறு சிலர் கொஞ்சிக் கொஞ்சி கழுத்தறுப்பார்கள்; வீரன் வாளால் அதை செய்து முடிக்கிறான்'

என்பது தான் இதன் பொருளாகும்;

## அபாயம் நிறைந்த திட்டம்

நண்பா, தமிழ் மக்கள் மத்தியிலே செல்லும் போது அமைச்சர்கள் இனிக்க இனிக்க பேசிடினும்; சிரித்துக் களித்திடினும், சிங்காரமாக செந்தமிழில் உரையாற்றிடினும்—அவர்களது நோக்கமெல்லாம் தமிழ் இனத்தின் கழுத்தை அறுத்திடுவதுதான்!

தமிழினத்தின் மீது அடக்கு முறைகளை அள்ளி வீசி—அவசரகாலச் சட்டங்களின் கீழ் கொடுமைப்படுத்தி—சிறையிலடைத்து சித்திரவதைப்படுத்தி; இனக்கலவரங்களைமூட்டிவிட்டு தொல்லை கொடுத்தும்—தமிழினம் தனது உரிமைக் கோரிக்கையிலிருந்து — விடுதலைப்போராட்டப்பாதையிலிருந்து—சிறிதும் விட்டுவிலகாது வச்சிர சிந்தையுடன் இருப்பதைக் கண்ட சிங்கள ஏகாதிபத்தியம் இப்போது கையாளத் தொடங்கியிருக்கும் புதிய தந்திரம்தான் தமிழ் மக்களிடம் நெருங்கி அணைத்திடுவது போல அணைத்து மயக்கி அவர்கள் அறியாமலேயே அவர்களை அழித்தொழிப்பதாகும்.

ஈழத்தில் தமிழினத்தின் தனித்துவத்தை அழித்திட—தமிழினத்தின் கழுத்தறுத்திட—போடப்பட்டுள்ள இத்திட்டம் மிகவும் அபாயகரமானது. நேரே எதிர்த்திடும் பகைவனை விட நண்பனைப் போல நடித்து இனிக்கப்பேசி சமயம் பார்த்து முதுகில் குத்திட நினைப்பவன் அதிக ஆபத்தானவன். அதைத்தான் செய்யப்பார்க்கிறது ஐ. மு. அரசு! இதில் தமிழ் மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடனிருந்திட வேண்டும்!

## பிரச்சினையை தீர்க்க அவர்கள் திட்டம்

நண்பா, ஈழத்தமிழினத்தை முற்றாக அடிமைப்படுத்தி அழித்தொழித்து, ஒரு தனிச் சிங்கள பௌத்த நாடாக இலங்கையை ஆக்குவது தான் ஆட்சியாளர்களின் நோக்கம் என்பதனை அரசியல் நிர்ணயசபையின் வழி முறைக்குழுவுக்கு அரசியல் திட்ட விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா சமர்ப்பித்துள்ள புதிய அரசியலமைப்புக்கான அடிப்படைத்தீர்மானங்கள் ஐயத்துக்கிடமின்றி எடுத்துக் காட்டி விட்டன.

புதிய அரசியல் திட்டம் வரும் வரை பொறுமையாக இருங்கள்; புதிய அரசியல் திட்டம் எழுதப்படும் போது தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளையெல்லாம் தீர்த்திடுவோம்; என்று அமைச்சர்களும் ஆளுங்கட்சி ஆதரவாளர்களும் கூறிவந்தனரன்றோ! தமிழினத்தின் பிரச்சினைகளை எப்படித் தீர்த்திடப் போகிறார்கள் என்பது இப்போது புரிந்து விட்டது!

இந்நாட்டில் ஓர் ஒற்றையாட்சி பௌத்த குடியரசினை உருவாக்குவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் பிரதேசத்தை — தனித்துவத்தை—அழித்தொழித்து இந்நாட்டை பரிபூரணமான பௌத்த சிங்கள நாடாக்குவதன் மூலம் தமிழினத்தின் 'பிரச்சினைகளை' தீர்ப்பதுதான் சிங்கள ஆட்சியாளர்களின் ஒரே திட்டம் என்பது தெளிவாகிவிட்டது!

## மரணசாசனம்

ஆம், புதிய அரசியல் திட்டத்துக்கான அடிப்படைத்தீர்மானங்கள் இந்நாட்டுத் தமிழினத்தின் மரண சாசனம்; தமிழ்பேசும் மக்களின் தனித்துவத்தை அழித்தொழித்திடும் கொடு நஞ்சு!

இந்நாட்டில் அந்நியன் காலடியெடுத்து வைதத நேரத்தில் தமது பிரதேசத்தில் தனியரசு நடத்திக்கொண்டிருந்தவர்கள் தமிழ் பேசும் மக்கள்: சிங்கள அரசும், தமிழரசும் இந்நாட்டில் இருந்ததை சிங்களவர்களின் மகாவம்சமே ஏற்றுக்கொள்ளுகிறது! இந்நிலையில் இன்று அந்நிய ஆதிக்கத்தின் கடைசிப்பிடியிலிருந்தும் விடுபட்டு இலங்கை சுயேச்சையான நாடாகும்போது அநநியன் இங்கு நுழைந்த

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தை அழித்திட முனைகிறது அரசு; அதற்கு ஆலவட்டம் வீசுகிறார் அருளம்பலம்!

## முக்கூட்டணியின் ஏழரை ஆட்சியில் தமிழர்கள் படும் அல்லல் இதோ!

முக்கூட்டு முன்னணி என்றும் (சிங்ஹல) மக்கள் அரசாங்கம் என்றும் கூறப்படும் இவ்வரசாங்கத்தின் ஏழரை(மாத) ஆட்சியிலே தமிழ்த்தாயின் தவப்புதல்வர்கள் தாமனுபவித்த எண்ணற்ற இன்னல்களை எண்ணி எண்ணி மனம் குமுறிக் கொண்டிருக்கும் வேளையிலே, தமிழ் உணர்ச்சி தமிழுக்காகப் போராட தமிழ் இளைஞர்கள் தயாராகிக்கொண்டிருக்கும் வேளையிலே தன் குள்ளநரிப் புத்தியைக் காட்டியிருக்கின்றார் 'சிமோல்' அருளம்பலம்;

பாடசாலை மாணவர்கள் முதல் பட்டதாரிகள் ஈருக இச்சிங்ஹல சோசலிச அரசாங்கத்தை சின்னாபின்னப் படுத்த எண்ணியிருக்கும் வேளையிலே சிமோல் அருளம்பலத்தின் தலைமையிலுள்ள அரசியலுக்குச் சிமோல்களான மூவரும் முக்கூட்டு அரசாங்கத்தின் மூன்று கால்களையும் நக்கி அதன் 4வது காலாகச் சேர்ந்து நற்கூட்டு நாச்சணியாகிவிட்டார்கள்.

இந்த நடவடிக்கைக்கு சிமோல் அருளம்பலம் கொடுத்த விளக்கம் 4.1.1971 தினகரனில் முற்பக்கத்திலே கொட்டை எழுத்துக்களில், வெளியாகியதை வாசித்த எந்த ஒரு தமிழனும் (எட்டப்பர் தவிர்ந்த தன்மானத் தமிழர்) கொதித்தெழாமல் இருந்திருக்க முடியாது; அருளம்பலம் அளித்த விளக்கம் இதோ!—

''இனத்துவேஷம், கோஷ்டிமனப்பான்மை, சமூகப் பாகுபாடு, எதுவும் காட்டாமல், இலங்கையின் சிறுபான்மை இனமான தமிழ் மக்களின் தேவைகளையும், அபிலாசைகளையும், நிறைவேற்றுவதில் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி வருகின்றது. இதனால்தான் எட்ட நின்று ஆதரிப்பதிலும், ஒட்டி நின்று ஆதரிப்பதே சிறந்தது என்று தமிழ்க் காங்கிரஸ் முடிவு செய்து ஐக்கிய முன்னணியின் நாலகாவது கட்சியாகச் சேர்ந்துள்ளது.''

தொடர்ந்து கூறியிருக்கின்றார், ''இலங்கையில் வாழும் சகல இன, மத மக்களிடையேயும் சகோதரத்துவம், சமாதானம் சௌஜன்யம், நட்புறவு, நல்லெண்ணம் ஆகியன ஏற்படவேண்டும் என்பதற்காக மக்கள் அரசு பெரும் முயற்சி எடுத்துவருகின்றது. இதில் செல்லையா குமாரசூரியர் ஆற்றிவரும் பங்கு அளவிடற்கரியது; தமிழ் மக்களின் கல்வி அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி ஆகிய விடயங்களில் எவ்வித வேறுபாடும் காட்டப்படவில்லை'' என்று.

செந்தமிழ்ச் செல்வர்களே! மேலுள்ள கருத்துக்களை திரும்பத் திரும்ப மனதுக்குள்ளே ஒவ்வொருவரும் சொல்லிப் பாருங்கள். ஒவ்வொரு சொற்களையும் தனித் தனியாக எடுத்துச் சொல்லிப்பாருங்கள். ''இனத்துவேஷமில்லை, கோஷ்டி மனப்பான்மை இல்லை, சமூகப் பாகுபாடு இல்லை. சகோதரத்துவம், சமாதானம் சௌஜன்யம், நட்புறவு, நல்லெண்ணம் தமிழ் மக்கள்மீது காட்டப்படுகின்றது. அது மட்டுமா? தமிழ் மக்களின் கல்வி வசதி; பொருளாதார வசதி என்பவற்றில் விசேட அக்கறை.'' ஆ! எத்தனை எத்தனை? இனியும் தமிழ் மக்களுக்கு எதுவித குறை யாவது உண்டா?' அருளம்பலத்தின் வாயில் இன்னும் வார்த்தைகள் வந்திருக்குமாயின் இன்னும் எத்தனை அளந்துவிட்டிருப்பாரோ தெரியாது;

அருளம்பலத்தை, பரிதாபத்திற்கிரங்கி நல்லூர்த் தொகுதி மக்கள் பாராளுமன்றத்திற்கு அனுப்பியதற்காக அவர்களுக்கு அரசியல் தெரியாதென அருளம்பலம் தப்புக்கணக்குப் போட்டுள்ளார்போலும். தமிழ் மக்களே! குறிப்பாக நல்லூர்த் தொகுதியில் வாழும் தமிழ்ப் பெருமக்களே! இளைஞர்களே! தாய்க்குலமே! இப்போது நீங்கள் விட்ட தவற்றை உணர்ந்துவிட்டீர்

**எம். ஆர்: சந்திரன்**

களா? தமிழ் மக்களின் அடிமைத்தளையை அறுத்தெறிய அயராதுழைத்து, அநீதியை எதிர்த்துப் போராடி அடி, உதைபட்டு, அல்லற்பட்ட உத்தமர் டாக்டர் நாகநாதனுக்குச் செய்த துரோகத்தை இப்போதாவது எண்ணிப்பாருங்கள். நன்றாகக் கண்ணீர் வடியுங்கள். ஐக்கிய முன்னணியின் இவ்வேழரை மாதத்திலே தமிழ் மக்கள்மீது அரசாங்கம் விசேட அக்கறையல்ல —அதி விசேட அக்கறை காட்டியுள்ளது. ஆம்! அதனால் இடைத்த பலாபலன்களில் ஒருசில இதோ:—

(1) ''தமிழ் மக்கள் வந்தேறு குடிகள். அவர்களுக்கு சிங்கள மக்கள் எந்தவித உரிமையும் தரத்தயாராகவில்லை என்பதை அறுதியுடன் தெரிவிக்கின்றேன்'' —நீதியமைச்சர் செனட்டர் ஜெயமானே தந்த முதலுதை;

(2) தமிழ்பகுதி நீதிமன்றங்களில் சிங்களத்தைத் திணிப்பது இது நீதியமைச்சரின் இரண்டாவது உதை. இதை எதிர்த்து தமிழ் மக்கள் தெரிவித்த எதிர்ப்புக் குரலையும் பொருட்படுத்தாது துணை நீதி அமைச்சர் பின்வருமாறு கூறியுள்ளார். 71ம் ஆண்டு முடிவுக்குமுன் இலங்கையிலுள்ள சகல நீதிமன்றங்களிலும் சிங்களம் புகுத்தப்பட்டுவிடும் என்பதை திட்டவட்டமாக அறிவிக்கின்றேன்'' இதுதானு அருளம்பலம் கூறும் சகோதரத்துவம், சமாதானம்!

(3) தமிழ்மொழி விசேட சட்ட விதிகள் படிப்படியாக ஒதுக்கப்பட்டு தனிச் சிங்களச் சட்டம் நாள் ஒரு வண்ணமாகத் திணிக்கப்படுகிறது. அச்சட்டவிதி வாபஸ் பெறப்பட வேண்டும் என்று கூட சிங்கள இனவெறியர் நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் கூறத் தொடங்கிவிட்டார்கள்.

ஆங்கிலம் தெரிந்த தமிழன் தமிழில் கடிதம் எழுதினால் [illegible] தாரது, இது பிழையானால் [illegible] ஊரிசாவத்துறை பாது உடு வழக்குத் தொடரலாம் என்கிறார் பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா. இதன் பின்பும் சில சிங்கள ஏகாதிபத்தியத்தின் 'தெமல' கண்காணிகள் தமிழ்ப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் சிங்களத்தைப் புகுத்தும்படி கோருகின்றார்கள். தமிழ் மக்களே இன்று ஆங்கிலம் தெரிந்தவனுக்குத் தமிழில் பதில் இல்லை. நாளை சிங்களத்தைப் பாடசாலைகளில்படித்தீர்களானால்சட்டப்படி நீங்கள் சிங்களம் தெரிந்தவர்களாகுவீர்கள். ஆங்கிலமும்போய் தனிச் சிங்களத்தில் கடிதங்கள் வந்து சேருமென்பது பிலிக்ஸின் கூற்றிலிருந்து வெள்ளிடை மலையாகத் தெரியவில்லையா?

(4) தமிழக உறவுக்குத் தடை:- தமிழகத்திலிருந்து இறக்குமதியாகும்பத்திரிகைகளைவிட ஆபாசமான எண்ணற்ற பத்திரிகைகள் எத்தனையோ இருக்கக் கூடியதாக தமிழகச் சஞ்சிகைகளை மட்டும் தடை செய்ய நடவடிக்கை எடுத்து மக்களின் எதிர்ப்பும், குறிப்பாக சுதந்திரனின் எதிர்ப்பும் தாங்க முடியாமல் சில பத்திரிகைகளைத் தடை செய்தும், சிலவற்றின் கோட்டாவைக் குறைத்துமுள்ளது கோஷ்டி மனப்பான்மை அற்ற அரசாங்கம். தமிழ்ப் படங்களின் இறக்குமதித் தடைக்கும் திட்டம் தீட்டப்படுகின்றது. தமிழ்ப் பெருங் கவிஞர் பாரதியின் பாடலை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனத்திலிருந்து நீக்கி வைத்து பின் எதிர்ப்புக் குரல் தாங்கவியலாது அத்தடை நீக்கப்பட்டது. இப்பொழுது சென்னை வானொலி நிலையம் ஒலிபரப்பும் விடயங்களை யாழ்ப்பாணத்தில் தெளிவாகக் கேட்காமல் செய்வதற்காக உப அஞ்சல் நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்படப் போகின்றதாம்;

(5) அப்பாவிக் கதிர்காம யாத்திரீகர்கள் தமிழனாகப் பிறந்த காரணத்தால் தடுப்பு முகாமில் தள்ளப்பட்டார்கள். பா. உ.க்கள் தலையிட்டு அவர்கள் இலங்கைத் தமிழர் என நிரூபித்த போதும் வகுப்பு வாதிகள் விடுதலை செய்ய மறுத்துவிட்டார்கள்.

(6) இரவும் பகலும் உறக்கமின்றிப் படித்து, பரீட்சையில் திறமையாகப் பாஸ் பண்ணியும், தமிழ் இரத்தம் உடம்பில் உள்ளபடியால் சிங்கள மாணவர்களைவிடப் புள்ளிகள் கூட எடுத்தாலே பட்டப் படிப்புக் கிடைக்குமாம். இந்த வருடம் 30 புள்ளியென்றால் வருசிற வருடம் 30 புள்ளியைத் தரப்படுத்தி 60 ஆக்குவார்கள். இதுதான் அருளம்பலம் கூறியது போல் தமிழ் மக்களின் கல்வி வசதியில் விசேட அக்கறை காட்டிச் செய்த சிறப்பு.

(7) தமிழர்களின் தொன்மை வாய்ந்ததும், பாடல் பெற்ற தலமுமாகியகோணேசர் கொலுவிருக்கும் கோணமாமலையை 'இராஜசிங்க கொட்டுவ' எனப் பெயச் மாற்றப் போவதாக வானொலியில் அறிவித்துவிட்டு, கிளம்பி எழுந்த நேமிநாதன் அவர்களின் எதிர்ப்பால் அதை இப்பொழுது மழுப்பி விட்டார்கள். ஆனால் திரும்ப நடைமுறைப் படுத்தாமல் இருப்பார்களென்பது சந்தேகம்.

(8) இறுதியாக, தமிழ் மக்களின் உரிமைக் குரலுக்கு அம்மையாரும் சவால்விட்டிருக்கின்றார். 1966 சனவரி 8-ம் திகதி தமிழ்மொழி விசேட சட்டவிதி மசோதாவை எதிர்த்து இனத்துவேஷம் கிளப்பி ஒழுங்கை மீறிப் பொலீசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான மாபெரும் துரோகி இரத்ன சாரா தேரோவிற்குச் சிலை வைத்து, அதைத் திறந்து வைத்துப் பேசிய அம்மையார் ''தனது உயிரையும் மதியாது பழைய அரசாங்கத்தின் இரகசிய ஒப்பந்தத்தை அம்பலமாக்கிச் சிங்கள மொழிக்காகப் போராடித் தன்னையேதியாகம் செய்த இரத்னசாரா தேரோ ஓர் தேசிய வீரராகக் கணிக்கப்படுவார். அவரின் முன்மாதிரியை மற்றைய இளைஞர்களும் கடைப்பிடித்தல் வேண்டும்'' என்று கூறியிருக்கின்றார்.

சோசலிச அரசாங்கமென்று தன்னைக் கூறும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் தலைவரும், பிரதமருமாகியவர் கூறும் முன்மாதிரியையும் வகுப்புவாதத்தையும் பாரீர். அரசாங்கத்தின் ஒழுங்கையும் சட்டத்தையும் மீறியவனைப் பின்பற்றுமாறு 'அட்வைஸ்' பண்ணுகின்றார் அரசாங்கத்தின் தலைவர்.

இரத்தினசாரா தேசிய வீரரானால் எம்மிடையே உள்ள தேசிய வீரர்கள் எத்தனை எத்தனை. திருமலைத் தியாகி நடராஜன் தொடக்கம் 58-ம் ஆண்டு உயிர்த் தியாகம் செய்த அத்தனை பேரும்தேசியவீரர்களன்றோ!

அருளம்பலம் அவர்களது அறிக்கையிலுள்ள இனத்துவேஷம், கோஷ்டி மனப்பான்மை என்பவைகள் தம்மிடம் உண்டா இல்லையா என்பதற்கு விளக்கத்தை அறிக்கை வெளியாகி 4தினங்களுக்குள்ளேயே அம்மையார் தந்து விட்டார்.

இறுதியாக, தமிழ் மக்களிடையேயுள்ள இக்காளான்களாகிய இவ்வடி வருடிகள் இன்னும் தமிழமக்களைத் தப்புக் கணக்குப் போட்டிடுவது அவர்களின் மடமைத்தனம் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன். தமிழர் விரோதிகளைக் களைந்தெறியும் காலம் கிட்டிவிட்டது. தங்கத் தமிழர் கூட்டமே! வண்டமிழ் வாலிபர்களே! நீ சிங்கமெனச் சீறியெழும் காலம் நெருங்கி விட்டது. துணிந்து நில்! தொடர்ந்து செல்! வெற்றி உனதே! தந்தை செல்வாவின் பாதைக்கு அழிவேயில்லை;

---

### மலர்மாலை இல்லாத வரவேற்பு!

மகாதேசாதிபதியை வரவேற்க பலாலி விமான நிலையத்துக்கு வந்திருந்த தமிழரசுக் கட்சி எம். பீக்கள் கரம் கூப்பியும் கை குலுக்கியும் அவரை வரவேற்றனரே தவிர எவரும் மலர் மாலை சூட்டவில்லை. தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள் மலர் மாலை சூட்டி வரவேற்றனர்;

—வீரகேசரி(18-1-71)

---

## 'சுதந்திரன்' வழங்கும்

# மாணவர் மலர்!

'தரப்படுத்தல்' என்னும் இனவெறித் திட்டத்தின் கீழ் தமிழ் மாணவர்களது நியாயமான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. கல்வித்துறையில் தமிழ் மாணவர்கள் இலங்கை முழுவதும் ஒதுக்கப்படுகின்றனர். ஆசிரியர் பற்றாக்குறை, பாடசாலை இல்லாமை, மற்றும் கல்வி வசதிகள் செய்துகொடுப்பதில் தமிழ் மாணவர்களுக்கு அநீதி இழைக்கிறது ஆட்சியென்பது அனைவரும் ஒப்புக்கொள்ளும் ஓர் உண்மை.

இந்த உண்மைகளை புள்ளி விபரங்களுடன் எடுத்துக்காட்டி தமிழ் மாணவர்களின் குமுறலை எடுத்துக் காட்டுவதாக சுதந்திரன் மாணவர் மலர் அமையவிருக்கிறது!

## 17.2.71ல் சுதந்திரன் "மாணவர் மலர்" வெளிவரும்

இம்மலரில் இடம்பெறுவதற்கு ஏற்ற கட்டுரைகளை மாணவர்களிடமிருந்தும்மாணவர்களின் கல்விப் பிரச்சினையில் அக்கறைகாட்டும் அறிஞர்களிடமிருந்தும்எதிர்பார்க்கிறோம். தமிழ் மாணவர் பேரவையினர் சுதந்திரனின் முயற்சியை வரவேற்பார்கள் என்றும் இதற்கு முழு ஒத்துழைப்பும் தருவரென்றும் நம்புகிறோம்.

கட்டுரைகள் அனுப்பும் மாணவ மாணவிகள் தமது புகைப்படங்களையும் அனுப்பத் தவறவேண்டாம்! கட்டுரை கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 8-2-71

—ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**கோவை-மகேசன்**

# நான் கைதி ஆனது ஏன்?

விசித்திரமான தலைப்பாக இது உங்களுக்கு தோன்றலாம். என்னைக் கைது செய்து ஒரு நாள் இரவு முழுவதும் பொலிஸ் சிறையில் அடைத்து வைத்த அதிகாரவர்க்கத்தினரால் என்னைக் கைது செய்ததற்கான சரியான காரணத்தை காட்டிட முடியவில்லை. என்மீது குற்றப்பத்திரிகை சுமத்திட முடியவில்லை. அதனால்தான் நான் கைது செய்யப்பட்டது ஏன் என்பதை எனக்குள் நானே சிந்தித்துப்பார்த்தேன். அந்தச் சிந்தனைகளை எனது அபிமான வாசகர்களாகிய உங்களுக்கு—தங்கத் தமிழ் நாட்டின் சிங்க இளைஞர்களுக்கு—கட்டுரை வடிவில் தந்திட நினைத்தேன். அதனால் தோன்றியதே இந்தத் தலைப்பு.

கைது செய்யப்படுதல், சிறை செல்லுதல் என்பன இலட்சிய வாதிகளுக்கு -விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு--சாதாரணமான ஒரு சம்பவமாகும். பொன் சுடச் சுட ஒளிவிடுதல் போல—இத்தகைய சம்பவங்கள் இலட்சியவாதிகளுக்கு புதிய முறுக்கையும் முனைப்பையும் வைராக்கியத்தையுமே மேலும் தூண்டி விட்டிருக்கின்றன.

பாரத நாட்டின் அடிமைத் தளையை அறுத்தெறிய வந்தித்த அண்ணல் காந்தி தமது பொது வாழ்வின் குறிப்பிடத்தக்க காலத்தை சிறையில் கழித்தவர்தான்.

பண்டித நேரு வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தால் அடிக்கடி கைதுசெய்யப்பட்டு கடும் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததை அறியாதவர்கள் இருக்கமுடியாது.

தமிழக விடுதலைப் பெரும் படையின் தானைத் தலைவராகவும் தலைசிறந்த பத்திரிகை ஆசிரியருமாகவும் விளங்கிய நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் பல தடவைகளில் கைது செய்யப்பட்டு காராக்கிருகத்தில் வாடியவர்.

இன்றைய தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களும் செந்தமிழ் காத்திடச் சிறை சென்றவர் பல தடவைகளில்!

14 ஆண்டுகள் தொடர்ந்து சிறைச்சாலையில் அடைத்து வைத்திருந்தும் ஷேக் அப்துல்லாவின் விடுதலை உணர்வை தடுத்து நிறுத்தி விட முடியவில்லை இந்திய அரசால்!

நமது தந்தை செல்வா அவர்களும் மற்றும் இயக்கத் தலைவர்களும் சிங்கள ஏகாதிபத்தியத்தினால் கைதி ஆக்கப்பட்டவர்கள் தாம்!

இப்படியே இலட்சியவாதிகளின் வரலாறுகளை நாம் புரட்டிப்பார்த்தால், அவர்களது வாழ்க்கையின் பெரும் பகுதி சிறைச்சாலைகளில் கழிந்திருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

நான் இப்படிக் கூறுவதால் அண்ணல் காந்தி, பண்டித நேரு, பேரறிஞர் அண்ணா, தந்தை செல்வா — போன்ற தியாகத்தலைவர்களின் வரிசையிலே என்னையும் ஒப்பிட்டுப்பார்ப்பதாக யாரும் கருதிவிடக்கூடாது;

அந்த அளவுக்கு எனக்கு 'தலைக்கனம்' துளியும் கிடையாது. மேற்குறித்த பெருமக்களது நிழலில் நிற்கக்கூட எனக்கு அருகதையுண்டா என்பதையிட்டு நான் ஐயப்படுகிறேன்.

ஆனால் ஒன்றுமாத்திரம் நான் துணிச்சலோடு சொல்லிக் கொள்வேன். நான் இலட்சியத்துக்காக வாழுகிறவன். இலட்சியத்துக்காக வாழ்க்கையில் எத்தனையோ தொல்லைகளைத் தாங்கிக் கொண்டிருப்பவன் — செழுமையான வாழ்க்கையை அமைத்திட வசதியான வாய்ப்புக்கள் சில வந்தும் அவற்றை இலட்சியத்துக்காக உதறித் தள்ளியவன். அந்த வகையிலே எனது இலட்சிய உறுதிக்கு அரசாங்கம் கொடுத்த 'நற்சான்று பத்திரமாக' நான் கைது செய்யப்பட்டதை எண்ணி எண்ணி பெருமைப் படுகிறேன்; உவகையடைகிறேன்.

ஆட்சியாளர்கள் என்னைக் கைது செய்தார்கள் என்றால் தனிப்பட்ட கோவை மகேசன் மீது கொண்ட குரோதத்தினாலல்ல—

இந்நாட்டில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருப்பதும், இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களை அரசியல் விடுதலையை நோக்கி இட்டுச் செல்வதும்—தனக்கென ஒரு நீண்ட வரலாறு கொண்டதுமான சுதந்திரன் ஏட்டின் ஆசிரியரையே கைது செய்தார்கள்; ஒரு விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவனை கைது செய்தார்கள்; என்பதுதான் அர்த்தமாகும்!

ஏனெனில்,

நான் திருடவில்லை; கள்ளச் சாராயம் காய்ச்சிடவில்லை; கற்பழிக்கவில்லை; சட்டத்தை மீறவில்லை; சமூக விரோதச் செயல்கள் எதிலும் ஈடுபடவில்லை;

நான் செய்ததெல்லாம் ஒரு நேர்மையான பத்திரிகைக்காரன் செய்ய வேண்டிய நியாயமான கடமையைத்தான்! தயவு தாட்சண்ணியம் இன்றி ஆள்வோரின் அலங்கோல நிர்வாகத்தை—ஊழல்களை—ஊதாரித்தனத்தை கண்டித்தேன்; தொடர்ந்தும் அந்தப்பணியை செய்து வருவேன்.

ஆட்சியாளர்கள் ஈழத்தமிழினத்துக்கு இழைத்துவரும் அநீதிகளை கடுமையாகச் சாடவும், தமிழையும், தமிழினத்தையும் ஒழித்துக்கட்ட போடப்படும் சதித்திட்டங்களை அம்பலப்படுத்தவும் தமிழ்பேசும்மக்களுக்கு இன, மொழி உணர்வுகளை ஊட்டவும் எனது பேனாவைப் பயன்படுத்தி வருபவன் நான்!

ஆகவே நான் கைதியானேன் என்றால் அதற்கு இரு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று நேரடியான காரணம்; மற்றொன்று மறைமுகமான காரணம்.

நேரடியான காரணம், அரசாங்கத்தின் ஊழல்களையும் அமைச்சர்களின் தவறுகளையும் அம்பலப்படுத்தும் வளைந்து கொடுக்காத பத்திரிகையாளனாக நான் இருப்பது.

மறைமுகமான காரணம்- நான் இந்நா[illegible] பேசும் மக்களின் அரசியல் விடுதலை இயக்கமான தமிழரசுக் கட்சியை சார்ந்து நின்று தமிழ் தேசிய உணர்வை தமிழ்இனத்துக்கு ஊட்டி வருகிறவன் என்பதாகும்;

ஈழத்தில் வேறு எந்தப் பத்திரிகையாளரும் இதுவரை கைதுசெய்யப்பட்டதாக வரலாறு இல்லையே; அப்படியிருக்க என்னை மட்டும் அரசு ஏன் கைது செய்திருக்க வேண்டும் என்ற கேள்வியொன்றுக்கு இவ்விடத்தில் இடமுண்டு.

இதற்குப் பதில் தெரிய வேண்டுமானால் பத்திரிகையாளர்களைப் பற்றியும் நீங்கள் சற்றுத்தெரிந்துகொள்ள வேண்டும்:

பத்திரிகையாளர்களை இரண்டுவகையினராகப் பிரிக்கலாம்;

**(1) பச்சோந்தி பத்திரிகையாளர்கள்:-**

இவர்கள் தமக்கென ஒரு சொந்த இலட்சியம், கொள்கை இல்லாதவர்கள். பத்திரிகை 'முதலாளி' கொடுக்கும் கட்டளைகளுக்கு ஏற்ப தமது பேனாவை ஓட்டுபவர்கள். சுயமாக சிந்தித்து தமது கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைத்திடும் ஆற்றலற்றவர்கள். 'வயிறு கழுவுதற்காகவே' பேனா பிடிப்பவர்கள் இவர்கள்: இன்றைக்கு காகம் கறுப்பு என்பார்கள்; நாளை பத்திரிகை முதலாளி, 'காகம் சிவப்பு' என்று எழுதும்படி கட்டளையிட்டால் விழுந்தடித்துக்கொண்டு காகம் சிவப்பு என்று எழுதுவார்கள்: பொதுமக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பதற்குப் பதிலாக அதிகாரவர்க்கத்தினரதும் தமக்கு சம்பளம் போடும் முதலாளிகளினதும் எண்ணத்தை பிரதிபலிப்பவர்கள். சுருக்கமாகக் கூறினால் புனிதமான பத்திரிகைத் தொழிலை 'தாசித் தொழில்' போலக் கருதிடும் போக்கினர் இவர்கள்;

ஈழத்தில் இத்தகைய 'பச்சோந்திகள்' பெருகிவருவது கண்டு எனக்குள் புழுங்கி நான் வேதனைப்படுவது உண்டு.

**(2) இலட்சிய பத்திரிகையாளர்கள்**

பத்திரிகைத் தொழிலை வெறும் தொழிலாக மட்டுமே கருதிடாமல் மக்கள் பணியாக கருதுபவர்களே இலட்சியப்பத்திரிகையாளர்கள். இப்படிப்பட்டவர்கள் கண்டவர் அனைவருக்கும் 'யேஸ் சேர்' போடவோ கதிரை துடைக்கவோ போக மாட்டார்கள்: நெஞ்சுத் துணிவும், நேர்மைத் திறனும் கொண்டவர்கள்; உள்ளத்துக்கு சரியென்று படும் எண்ணங்களை தளராமல், தயங்காமல் வெளியிடக்கூடியவர்கள். பத்திரிகையாளர்களின் உரிமைகள், சலுகைகளை எதுவரினும் விட்டுக் கொடாது கட்டிக் காத்திட வேண்டுமென்ற துடிப்புள்ளவர்கள். மக்களை நல்ல நெறியிலே வழிநடத்தவேண்டும் என்ற ஆர்வமுள்ளவர்கள். அரசாங்கத்தின் அநீதியான போக்கினை - அக்கிரமங்களை தட்டிக் கேட்கும் தைரியம் மிக்கவர்கள். பத்திரிகா தர்மத்தை உயிராக கருதுபவர்கள்!

இந்த இலட்சியப் பத்திரிகையாளர் வரிசையில் ஒருவராக என்னைக் கணித்த காரணத்தினால்தான் அரசாங்கம் என்னை கைதுசெய்தது என்று நினைக்கிறேன். என்னைக் கைதுசெய்ததன்மூலம் ஈழத்துப் பத்திரிகை உலகில் இலட்சியத்துக்காக கைது செய்யப்பட்ட முதல் பத்திரிகையாளன் என்ற பெருமையை அரசு வலியவந்து எனக்கு வழங்கிவிட்டது.

சில திங்களுக்குமுன் ஒரு நாள் வாசித்த செய்தியொன்று இங்கு எனது நினைவுக்கு வருகிறது. அமெரிக்காவில் என்று நினைக்கிறேன்—ஒரு பத்திரிகையாளர் மீது செய்தியொன்றை வெளியிட்டது சம்பந்தமாக தொடரப்பட்ட வழக்கொன்றில் குறிப்பிட்ட செய்தியை தந்தவரது பெயரை அப்பத்திரிகையாளர் வெளியிட இறுதிவரை மறுத்து பத்திரிகா தர்மத்தை பாதுகாக்க பல்லாயிரக் கணக்கான டாலர்களை அபராதம் கட்டினார் என்ற செய்திதான் அது. அச்செய்தியைப் படித்த போது நான் மெய்சிலிர்த்தேனாயினும், எனக்கும் அப்படியொரு 'சத்திய சோதனை' இவ்வளவு விரைவில் வருமென நான் எதிர்பார்த்திருக்கவில்லை.

**வளரும்**




பாலசிங்கம்,
கொழும்பு-6.

கே: சுதந்திரனை 'நாய்' என்று திட்டியிருக்கிறதே ஒரு 'தறுதலை' பார்த்தீர்களா?

ப: பார்த்தேன்! சுதந்திரன் ஒரு 'நாய்' தான், தமிழ் பேசும் மக்களுடைய உரிமைகளை எவரும் கவர்ந்து செல்ல முடியாமல் காத்து நிற்கும் காவல் நாய்தான் சுதந்திரன் தமிழை, தமிழினத்தை எவரும் பழித்துரைத்தால் அது கண்டு பொறுக்காது கொதித்தெழும் 'காவல்' நாய்தான் சுதந்திரன். 'தறுதலைகள்' போல நன்றிகெட்டதுமல்ல — நன்றியுணர்ச்சியிலும் 'சுதந்திரன்' ஓர் நாய்தான்!

கே: சுதந்திரனில் வெளிவரும் அரசியல் மடலிலிருந்தும் 'எண்ணம்' பகுதியிலிருந்தும் சில பகுதிகளை மறுபிரசுரம் செய்கிறதே 'தறுதலை'!

ப: ஆமாம்—அதன் வார்த்தைகளில் கூறினால் 'நாய்க் கக்கலை' ரசித்து உண்ணுகிறது!

கே: இரு மொழிப் பல்கலைக் கழகங்களை அன்று ஏற்ற சுதந்திரன் இன்று எதிர்ப்பதேன் என்று கேட்கிறதே 'தறுதலை'!

ப: விஷயம் விளங்காமல் அது அலட்டுகிறது. அன்று இரு மொழிப் பல்கலைக் கழகத்தை ஏற்றோம் என்றால் சிங்களமும் தமிழும் கொண்ட இரு மொழி பல்கலைக் கழகத்தையல்ல—ஆங்கிலமும் தமிழும் கொண்ட இரு மொழிப் பல்கலைக் கழகத்தை! இன்று குமாரசூரியர் கூறுவது தமிழும் சிங்களமும் போதனா மொழிகளாகக் கொண்ட இரு மொழிப் பல்கலைக் கழகம்—சிங்களத்தை தமிழ் பகுதியில் போதனா மொழியாக்குவதை அன்றும் எதிர்த்தோம்; இன்றும் எதிர்க்கிறோம்! இது புரியாமல் தனது தறுதலைக் குணத்தை காட்டுகிறது அந்த ஏடு!

செ. இராமலிங்கம்,
யாழ்ப்பாணம்.

கே: தமிழரசுத் தலைவர்கள் தமது பிள்ளைகளுக்கு சிங்களம் படிப்பித்துக் கொண்டு தமிழ் மக்களைச் சிங்களம் படிக்க விடாது தடுக்கிறார்கள் என்று கூறுகிறாரே கே. பி. இரத்நாயகா?

ப: கிளிப்பிள்ளை போல யாரோ சொல்லிக் கொடுத்ததைக் கேட்டு பாடம் ஒப்புவிப்பது போலப் பேசியிருக்கிறார் இரத்நாயகா. தமது பிள்ளைகளுக்கு சிங்களம் போதிக்கும் தமிழரசுத் தலைவர்கள் யார் யாரென்பதையும், அவர்கள் எங்கே சிங்களம் படிக்கிறார்கள் என்ற விபரத்தையும் கே. பி. இரத்நாயகாவால் கூறமுடியுமா?

கே; குட்டக்குட்ட குனிகிறவனும் மோடன், குனியக் குனியக் குட்டுகிறவனும் மோடன் என்கிறாரே கே. பி. இரத்நாயகா!

ப: ஆமாம், சிங்களவர்கள் குட்டக்குட்டத் தமிழர்கள் இனியும் குனியக்கூடாது என்பதை தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறுகிறார்!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டியின் கீழ் தன்னாட்சி நிறுவியதால் கனடாவில் தப்பிப்பிழைத்த இனத்தின் கதை!

மேற்குக் கோளார்த்தத்தின் வட பகுதியாகிய வட அமெரிக்கக் கண்டத்தின் வடபாதிப் பிரதேசம் கனடாவாகும். அமரிக்க ஐக்கிய அரசுகள் (U. S. A.) இதற்கு வடக்கே, வட துருவம்வரை பரந்திருக்கும் பல தீவுகளைக் கொண்ட நாடாகும்.

இலங்கைவாழ் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களுக்குப் பெரிதும் ஊக்கம் தரும் பழைய வரலாற்றைக் கொண்ட ஒரு நாடு கனடா. (இது பற்றிய விபரத்தை வேறொரு கட்டுரையில் 7 ம் பக்கத்திற் காண்க) பிரெஞ்சு ஆங்கிலம் என இரண்டு வெவ்வேறு மொழிகள் பேசும் மக்களையும் 10 பிரதேச அரசுகளையுங் கொண்ட ஒரு சமஷ்டி நாடு கனடா. (அடைப்புக் குறிக்குள் தலை நகரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்)

10 பிரதேச அரசுகளாவன (படம் பார்க்க):—1 எட்வேட் இளவரசன் தீவு. அரசு (சாலற்ரவுன்) 2 நோவா ஸ்கோஷியா அரசு (ஹலிபாக்ஸ்) 3 நியூபிறன்ஸ்விக் அரசு (பிரடரிக்டன்) 4 நியூ பவுண்லாந்து அரசு (சென் ஜோன்ஸ்) 5 கியூபெக் அரசு (பிரெஞ்சு மொழி பேசும் சிறுபான்மை இனத்தின் அரசு) (கியூபெக்) 6 ஒன்ராறியோ அரசு (ரொறன்ரோ) 7 மனிற்ரோபா அரசு (வினிபெக்) 8 சஸ்காச்சுவான் அரசு (றெஜினு) 9 அல்பேட்டா அரசு (எட்மன்ரன்) 10 பிரிட்டிஸ் கலம்பியா அரசு (விக்டோரியா):

இந்தப் 10 அரசுகளையும் விட யூக்கன் பிரதேசம் 11 வடமேற்குப் பிரதேசங்கள் 12 என இரு பிரதேச ஆட்சிகளும் இங்கே உண்டு. ஆனால் இவ்விரு பிரதேசங்களும் முறையே சுமார் 2 இலட்சம் சதுர மைல் 13 இலட்சம் சதுர மைல் எனப் பிரமாண்டமான நிலப்பரப்பைக் கொண்டிருந்தும், முறையே 14,000, 28,000, என்ற சனத்தொகையைக் கொண்டிருப்பதால் இவை அரசு இறைமை Statehood இதுவரை பெற்றிருக்கவில்லை.

கனடாவில் முதன் முதற் குடியேறிய மக்கள் பிரெஞ்சு மொழிபேசுபவர்கள் பிந்தி வந்த ஆங்கில மொழிபேசுபவர்களின் குடியேற்றத்தினலும் இயற்கைப் பெருக்கத்தினலும் இன்று பிரெஞ்சு மக்கள் அங்கே சிறுபான்மையினராகிவிட்டனர். இருந்தும் கியூபெக் மாகாணத்தில் இவர்கள் 81% ஆகி இருப்பதனல் தமது பிரதேசத்தையும் மொழியையும் பெரும்பான்மையினத்தவரின் நெருக்குதல்களுக்கு எதிர்த்து நின்று பேணி விட்டபடியால்—இன்று கனடாவிலுள்ள ஒரு மாகாணத்தில் தன்னரசு நிறுவிச் சமஷ்டி ஆட்சிக்குட்பட்டு வாழ்கின்றனர்.




1851 இல் கனடா அனைத்திலும் வாழ்ந்த மக்கள் தொகை ஆக 24 இலட்சம் (2.4 Million) மாத்திரமே 1961ல் கனடாவின் சனத்தொகை ஏறத்தாள 200 இலட்சம் (20 Million) இதில் பிரெஞ்சு சிறுபான்மை இனத்தவர் சுமார் 60 இலட்சம் (6 Million) அதாவது 30 வீதம்; மொத்த இலங்கைச் சனத்தொகையில் தமிழ் பேசும் மக்களின் வீகிதாசாரம் இது! (—7 ஆம் பக்கத்திலுள்ள கட்டுரையை காண்க)

சமஷ்டி ஆட்சியில் தன்னரசு நிறுவியிருப்பவர்களின் சார்பு எண்ணிக்கையைப் பார்ப்பவர்கள் தமிழ் பேசும் மக்களின் கோரிக்கை சாத்தியமற்றதென்றோ உலக நாடுகளில் நிகழாத புதுமை என்றோ கூறத் துணிவார்களா?

எமது இலங்கைத் தாய் நாட்டின் மொத்த சனத்தொகை இன்று ஏறத்தாள 100 இலட்சம். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தொகை 30 இலட்சம்! 30% கனடாவின் பாராளுமன்றம் பொதுமக்கள் சபை (House of Commons) செனெற் (Senate) என இரு சபைகளைக் கொண்டது. பொதுமக்கள் சபைத்தேர்தல் 5 ஆண்டுகளுக்கொரு முறை நிகழும்.

10 மாகாண அரசுகள் ஒவ்வொன்றிலும் தனித்தனி பாராளுமன்றங்கள் உண்டு. 9 மாகாண அரசுகளின் பாராளுமன்றங்களும் தனிச் சபைப் பாராளுமன்றங்களாகும். கியூபெக் அரசில் மாத்திரம் இரு சபைப் பாராளுமன்றம் உண்டு.

தமது சொந்த விவகாரங்களைத் தாமே நடாத்தி வருவதற்குப் பூரண ஆதிக்கம் பெற்றிருக்கும் மாகாணங்கள் பின்வரும் துறைகளில் சட்டமியற்ற முழு அதிகாரமும் பெற்றிருக்கின்றன:—1 மாகாண அரசமைப்புத் திட்டத்தை மாற்றுதல், 2 நேரடி வரி விதிப்பு, 3 சொத்துரிமை, 4 மாகாண ஆசுபத்திரிகள் லைசென்சுகள் 5 மாகாண எல்லைகளுக்கு அப்பால் நீடிப்பதான கப்பல், றெயில் தபால் தந்தித் துறைகள் தவிர்ந்த ஏனைய நிர்மாண வேலைகள், 6 விவாகப்பதிவு, 7 நீதி நிர்வாகம், 8 உள்ளூராட்சி, 9 கல்வித் துறை.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கு இந்த ஒன்பது அதிகாரங்களும் கிடைப்பது எப்பொழுது? எவர் கையில் உள்ள விஷயம் இது?

முதல் பக்க படவிளக்கம்:

## இந்த நினைவுச் சின்னம்! தமிழின் அடிமைச் சின்னம்!!

தங்கத் தமிழைப் பழித்தனர் வடநாட்டுக் கனக விசயர்கள் என்ற சேதி கேட்டு சிங்கம்போல சினந்தெழுந்து வடநாடு மீது படையெடுத்து வடவர் கொட்டம் அடக்கி—கற்பின் செல்வி கண்ணகிக்கு சிலையெடுக்க அவர்களது தலையில் கல் சுமந்து வரச் செய்தான் மாவீரன் செங்குட்டுவன் எனும் தமிழ் மன்னன்—அன்று!

தமிழுக்கு பகையானோர் வாழ்வதெங்கே— தலையற்றுப் போகாதோ ஊது சங்கே—என்றுமுழங்கினான் புரட்சிக்கவிஞன் பாரதிதாசன்!

ஆனால்...!

ஈழத்து அரசோ தமிழ் பகைவன் ஒருவனுக்கு நினைவுச் சின்னம் நிறுவியிருக்கிறது!

தமிழுக்கு எதிராக போர்க்குரல் எழுப்பி—ஈழத்தின் அரசியலில் தமிழுக்கு நியாயமான அளவு இடந்தருவதைக்கூட எதிர்த்து கிளர்ச்சி நடத்தி ''தலையற்றுப்போன'' சிங்கள இன வெறியனான 'இரத்தினசாரா' என்ற பௌத்த பிக்குவுக்கு இம் மாதம் 8ம் நாள் கொழும்பில் நிரந்தர நினைவுச் சின்னம் எழுப்பி—அவனைப் பாராட்டியிருக்கிறார்கள் முக்கூட்டணி அரசின் முப்பெருந்தலைவர்கள்!

சிங்கள இனவெறியின் மொத்தவடிவமான சின்னத்தை தான் முதல் பக்கத்தில் பார்க்கிறீர்கள்!

இந்த நினைவுச் சின்னம்,

இந்நாட்டுத் தமிழினத்தின் கொத்தடிமைத்தனத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு...தன்மானத்துக்கு ஓர் சவால்!

தலைமுறைதலைமுறையாக ஈழத்தமிழினத்தின் இன, மொழி உணர்வை மங்கிமறையவிடாது காத்து நிற்கக் கூடிய அணையா நெருப்பு...!

ஈழத்தமிழன்னையின் கைகளில் பூட்டப்பட்டிருக்கும் அடிமைத்தளையை என்றென்றும் நினைவூட்டியபடி இருக்கும் சிவப்பு விளக்கு...!

ஐ. மு. அரசின் சிங்கள பௌத்த வெறிக்கு ஓர் அடையாளச் சின்னம்...! தமிழ் விரோத உணர்வுகளின் முழு வடிவம்...!

தேசிய ஐக்கியம் பேசும் ஆட்சியாளரின் சுயரூபத்துக்கு ஓர் உரைகல்...! முக்கூட்டணியின் சோசலிச முகமூடியை கிழித்தெறிந்துவிட்ட கூர்வாள்!

அமைச்சர் குமாரசூரியர், வீ. பொன்னம்பலம், எம்.சி. சுப்பிரமணியம், பி. ஆர். செல்வநாயகம், ஆனந்தசங்கரி, அருளம்பலம் தியாகராசா போன்ற சிங்கள ஏகாதிபத்திய அடிவருடிகளின் தமிழ் துரோகத்தை என்றென்றும் அம்பலப் படுத்தியபடி இருக்கும் அழியா வடு!

தமிழ் அன்னைக்கு இந்நாட்டு அரசு கட்டியில் அணுவளவும் இடமில்லை; சிங்கள மொழிக்கு மட்டுமே மணிமகுடம்; என்ற கருத்தை வலியுறுத்தி நிற்கும் இச்சின்னத்தை கண்டபின்னராவது தமிழ் மக்களுக்கு இன, மொழி உணர்வுகள் பொங்க வேண்டாமா?

இதைக்கண்ட பின்னும் அப்படி தமிழ்வெறி வராதவன் உண்மைத் தமிழனக ஒருபோதும் இருககமுடியாது; தமிழன் என்ற உருவத்தில் இயங்கும் வெறும் மரக்கட்டையாகத்தான் அவன் இருக்கமுடியும்.

—கோவை.

## கனடாவின் மொத்த சனத்தொகை (1969) 200 இலட்சம்

| | அரசு | சனத்தொகை | சனத்தொகைவீதம் |
|---|---|---|---|
| 1 | ஒன்ராறியோ | 69, 60, 000 | 34.8 % |
| 2 | கியூபெக் | 57, 80, 000 | 28.9 % |
| 3 | பிரிட்டிஷ் கலம்பியா | 18, 70, 000 | 9.4 % |
| 4 | அல்பேட்டா | 14, 60, 000 | 7.3 % |
| 5 | மனிட்டோபா | 9, 60, 000 | 4.8 % |
| 6 | சஸ்காச்சுவான் | 9, 50, 000 | 4.8 % |
| 7 | நோவா ஸ்கோஷியா | 7, 50, 000 | 3.8 % |
| 8 | நியூ பிறன்ஸ்விக் | 6, 10, 000 | 3 % |
| 9 | நியூ பவுண்லாந்து | 5, 00, 000 | 2.5 % |
| 10 | எட்வேட் தீவு ★ | 1, 00, 000 | .5 % |

★ 1 இலட்சம் மக்களைக்கொண்ட எட்வேட் தீவின் 3 பரப்பு 2,000 சதுர மைல் மாத்திரமே! எமது தமிழ் பிரதேசம் இதிலும் பார்க்க 4 மடங்கு பெரியது.

## வீழ்ச்சியுற்ற...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்பறி, சென் யோசேப், சென்ற் லூயி ஆகிய 7 பல்கலைக் கழகங்களிலும் போதனு மொழி பிரெஞ்சு மாத்திரமே!

ஆங்கிலப் பல்கலைக் கழகங்கள் அனைத்திலும் பிரெஞ்சு மொழி போதிக்கப்படுகின்றது. பல்கலைக் கழகங்களில் சேர்வதற்குப் பிரெஞ்சு மொழி ஒரு கட்டாயபாடம்! நினைக்க முடியுமா இலங்கையிலுள்ள வித்தியோதய, வித்தியாலங்காரப் பல்கலைக் கழகங்களில் சேருவதற்கு ஒரு மாணவன் தமிழில் கட்டாய சித்தி பெற வேண்டும் [illegible] மும் இந்த நாட்டுத் தலைவர்கள் நெஞ்சில் உண்டா? தமிழ் மாணவர்களுக்குச் சிங்களமே போதனு மொழியாக்கும் அத்திவாரம் இடப்படும் சோஷலிசம் இங்கே பயிர் செய்யப்படுகின்றது!

சோஷலிசமல்ல—

—ச—ம—தர்ரீர்மம்ம்!!!

## பௌத்த பிக்குவின் எண்ணத்தை ஈடேற்றுவாராம்!

'சனவரி 8-ம்நாள் சிங்கள மொழியைப் பாதுகாக்க தமிழ் மொழிச் சட்டவிதிகளை எதிர்த்துப் போராடி உயிரைக் கொடுத்தவர் இரத்னசாரா என்ற பௌத்த பிக்கு. அவரது எண்ணத்தை நிறைவேற்றி வைக்கக் கூடிய முறையில், சிங்களம் மட்டும் சட்டத்தை நாடு முழுவதும் தீவிரமாக இந்த அரசாங்கம் அமுல் நடத்தும்—'

இவ்வாறு அரசாங்கக் கட்சி உறுப்பினரான குண்டசாலை பா. உ. திரு. யூ. பீ. வை. ஜினதாசா கம்பராவையில் நடைபெற்ற கூட்ட மொன்றில் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீழ்ச்சியுற்ற சிறுபான்மை இனம் மீண்டும் தலைதூக்கியது!

## பிரெஞ்சு பேசும் கனேடியர்களுக்கும் சமஷ்டி அரசியலமைப்பில் சம அந்தஸ்து!

## கனடாவின் முன்மாதிரியை ஈழமும் பின்பற்றுமா?

வரலாற்று அடிப்படையிலும் அரசியல் அடிப்படையிலும் இலங்கைத் தமிழ் பேசும் சிறுபான்மை இனத்தின் நிலைமை கனடாவில் பிரெஞ்சு மொழி பேசும் சிறுபான்மை இனத்தவரின் நிலைமையைப் பெரிதும் ஒத்திருக்கும் ஒன்றாகும்; கீழே குறிப்பிடும் நிகழ்ச்சிகளை இலங்கைத் திருநாட்டின் பின்னணியில் பார்த்து வாசிப்பவர்களுக்கு இந்த ஒற்றுமை பெரிதும் ஆச்சரியமளிப்பதாயிருக்கும்.

### கறையான் புற்றெடுக்க...

கனடாவில் முதன் முதல் குடியேறிய மக்கள் இன்று அங்கு பெரும்பான்மையினராக இருக்கும் ஆங்கிலம் பேசும் மக்கள் அல்லர். முதன் முதல் 17-ம் நூற்றாண்டில் அங்கு சென்று குடியேறியவர்கள் இன்று அங்கு சிறுபான்மையினராகிவிட்ட பிரெஞ்சு மொழி பேசுபவர்களே ஆகும். 1608 தொடக்கம் 1759 வரை கனடா ஒரு பிரஞ்சுக் குடியேற்ற நாடாக இருந்து பின்னர் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தது. இந்தக் கால முடிவில் அங்கு பெரும்பாலும் சென்லோறன்ஸ் நதிப் பள்ளத்தாக்கில் குடியேறியிருந்த 60,000 பிரஞ்சுமக்களின் சந்ததியினரே இன்று சுமார் 60 இலட்சம் (6 Million) பிரஞ்சு மக்களாக அங்கு வாழ்கின்றனர்.

இங்கிலாந்திலிருந்து வந்து குடியேறினாலும் இயற்கைப் பெருக்கத்தினாலும் இன்று ஆங்கில மொழி பேசும் மக்கள் கனடா அனைத்திலும் (கியூபெக் தவிர்ந்த ஏனைய) 9 அரசுகளிலும் பெரும்பான்மையினராகி விட்டனர். [F. P. யை ஆதரித்து நிற்கும் தமிழ் பேசும் மக்கள் ஒருகணம் நின்று சிந்திப்பதற்கான பெரிய ஒரு விஷயம் இது. F. P. என்றால் Family Planning!]

10 அரசுகளிலும் சனத்தொகை கூடியது ஆங்கிலம் பேசும் மக்களின் ஒன்ராறியோ அரசாகும். இங்கு வாழும் பிரெஞ்சுச் சிறுபான்மையினர் 11 வீதம்; அடுத்த பெரிய அரசு பிரெஞ்சு மொழி பேசுபவர்களை 81 (எண்பத்தியொன்று) வீதமாகக் கொண்டிருக்கும் கியூபெக் அரசாகும்.

### கியூபெக் விடுதலை முன்னணி

நியூபிறன்ஸ்விக் அரசில் (படத்தில் இலக்கம் 3) உள்ள பிரெஞ்சு மக்கள் 39 வீதம்; எட்வேட் இளவரசன் தீவு அரசில் (இலக்கம் 1) 17 வீதம் நோவாஸ்கோஷியா அரசில் (இலக்கம் 2) 12 வீதம். இலங்கையில் இது போன்று வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராயிருந்து கொண்டு நாட்டின் ஏனைய பகுதிகளிலும் குறிப்பிடக்கூடிய தொகைகளில் வாழ்கின்றார்கள். கனடாவிலிருந்து கியூபெக் அரசு தனியுரிமை பெற்ற அரசாகப் பிரிய வேண்டும் என்ற இயக்கத்தினர் (Quebec Liberation Front) இலங்கையிலுள்ள சுயாட்சிக் கழகத்தினர் போன்று வலிமை பெறத் தவறியதற்கு இவ்வாறான சனச்செறிவே காரணமாகும்.

1763 ஆம் ஆண்டின் பரீஸ் ஒப்பந்தம் (Treaty of Paris) கனடாவை இங்கிலாந்தின் ஆட்சிக்கு ஒப்படைத்தது. இதன் விளைவாக ஆங்கிலேயரின் ஆதிக்கம் வளர்ந்து இந்த அதிகாரத்தின் மூலம் ஆங்கிலேயர் இன்று பெரும்பான்மையினராகிவிட்ட போதிலும் அன்று இனவாரியில் பிரெஞ்சுக்காரர் பெரும்பான்மையினராக இருந்தனர். அன்று நாட்டின் பெயரும் புதிய பிரான்சு (New France) என இருந்தது! இன்று இலங்கை அனைத்திலும் சிங்கள ஆதிக்கத்துக்கு வித்திட முயலுபவர்கள் புதிய பிரான்சின் கதியை நினைவூட்டிக் கொள்வது பெரிதும் அவசியமாகின்றது.

### உரிமை மீட்சி

தோல்வியுற்ற மக்களின் மொழி பற்றிப் பரீஸ் ஒப்பந்தம் எதுவும் குறிப்பிடாதிருந்த போதிலும் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்த கியூபெக் மாகாணத்தில் பிரெஞ்சு மொழியும் தொடர்ந்து பாவிக்கப்பட்டு வந்தது. 11 வருடங்களுக்குப் பின்னர் 1774ல் ஏற்பட்ட சட்டம் (Quebec Act) மூலம் பிரெஞ்சு மக்களின் உரிமைகளில் ஒருசில பெரும்பான்மை ஆட்சியினரால் உறுதிப்படுத்தப்பட்டன. பிரெஞ்சுச் சிறுபான்மை இனத்தின் [1] மத உரிமை, [2] மொழி உரிமை, (3) அவர்களது சொந்தச் சிவில் சட்டங்கள் மூலம் பரிபாலிக்கப்படுகை, [4] அவர்களது பழக்க வழக்க பாரம்பரியம் பேணல் ஆகியவை சட்டங்கள் மூலம் மீண்டும் வழங்கி உறுதிப்படுத்தப்பட்டன.

புதிய பிரான்சு 1791ல், மேல் கனடா [தற்போதைய ஒன்ராறியோ), கீழ் கனடா [தற்போதைய கியூபெக்] எனப் பிரிக்கப்பட்டு இந்தக் குடியேற்ற நாட்டுக்கு பிரிட்டன் ஓரளவு சுதந்திரம் வழங்கியது. கியூபெக் மாகாண அரசில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தமது விவகாரங்களில் ஆங்கில மொழியையும் பிரெஞ்சு மொழியையும் பாவிப்பதெனத் தீர்மானித்தார்கள்.

1967ல் கனடா சமஷ்டி ஆட்சி நிறுவிய நூற்றாண்டைக் கொண்டாடியது. அங்கே யுத்தமுனையில் அரசுரிமை இழந்த பிரஞ்சு மொழி பேசும் மக்கள் அந்த நாட்டிலே அரச ஆதிக்கம் இல்லாததால் காலகதியில் சிறுபான்மையினராகினர். தம்மை வெற்றிகொண்ட ஆங்கில மொழி பேசும் மக்களை எதிர்த்து நிகழ்த்திய நீண்டகால கிளர்ச்சியின் விளைவாக மேலும் தமது இனமூலம் மொழியும், கலை, கலாச்சாரமும் அழிந்துவிடாது தமது பிரதேசத்தில் சமஷ்டிக்குட்பட்ட ஓர் அரசு நிறுவி வாழ்கின்றார்கள். இன்று உலக அரங்கில் தனியிடம் வகிக்கின்றார்கள்.

இன்று சிறுபான்மையினராகிவிட்ட பிரஞ்சு மக்களுள் லூயி சென்லோறன்ற், வில்பிரட்லௌறியர் என இருவர் இந்தக் கனடா நாட்டின் பிரதமர்களாகி ஆட்சி நடாத்தியிருக்கின்றார்கள். அத்துணை தூரம் அங்கே சகிப்புத்தன்மையும் பரஸ்பர மதிப்பும் காட்டும் பெரும்பான்மை இனம் உண்டு.

அந்தச் செழிப்பு நிறைந்த மண்ணின் பிரதமர் இன்று எமது நாட்டுக்கு விஜயம் செய்யும் தொடர்பில் சுதந்திரன் இந்தக் கட்டுரையைப் பிரசுரிக்கின்றது.

இந்த (British North America Act) ''பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தின்'' 133 பிரிவின்கீழ் பெரும்பான்மையினர் அனுபவிக்கும் உரிமைகள் அனைத்தையும் சிறுபான்மை இனத்தவர் பின்வரும் வகைகளில் அனுபவிக்கிறார்கள்:—

ஆங்கிலத்துடன் பிரெஞ்சு மொழியும் ஆட்சிமொழியாக இருக்கும். சிம்மாசனப் பிரசங்கம் இரு மொழிகளிலும் நிகழ்த்தப்படும்.

சட்டங்கள் அனைத்தும் இரு மொழிகளிலும் பிரசுரிக்கப்படும். பாராளுமன்றத்து ஹன்சாட்டு ஏடுகள் இரு மொழிகளிலும் பிரசுரிக்கப்படும்.

சமஷ்டி அரசாங்கத்தினதும் கியூபெக் மாகாணத்தினதும் பிரசுரங்கள் அனைத்தும் இரு மொழிகளிலும் இருக்கும்-காசுத்தாள்கள், முத்திரைகள் இதில் அடங்கும்.

கூட்டுத்தாபனங்கள் அனைத்தும் இருமொழிகளிலும் அலுவல் நிகழ்த்த வேண்டும்.

சமஷ்டி அரசினதும் கியூபெக் அரசினதும் விவகாரங்கள், பொதுமக்கள் சேவைகள் அனைத்தும் இரு மொழிகளிலும் நிகழும். இருமொழிப் பிரதேசங்கள் கடமையாற்றும் சிவில் சேவை அதிகாரிகள் இருமொழி அறிவு பெற்றிருக்கவேண்டும்.

சர்வதேசத் தொடர்புகள் தேவைகளைப் பொறுத்து ஆங்கிலத்திலோ பிரெஞ்சிலோ நிகழும்.

கியூபெக் மாநகரசபையில் இரு மொழிகளும் பாவிக்கப்படலாம். இரு மொழிகளிலும் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட வேண்டும். ஆனால் கடிதம் பெறுபவரின் மொழியில் மாத்திரம் விசேட அறிவித்தல்கள் கொடுக்கப்படும்.

கங்களில் சட்டத்துறை வகுப்புகள் பிரெஞ்சு மொழியில் நிகழ்கின்றன.

### கல்வித்துறை உரிமைகள்

கல்வித்துறை விவகாரங்களில் மாகாண அரசுகளுக்குப் பூரண ஆதிபத்தியம் உண்டு. எனவே நாட்டிலுள்ள சிறுபான்மையினர்—இலங்கையிலிருப்பதுபோல—கல்விப் போதனை தாய்மொழியில் நிகழவேண்டும் என்று சிம்மாசனப் பிரசங்கத்துக்குத் திருத்தங்கள் கொண்டு வரவோ அதற்காகப் போராடவோ வேண்டிய நிர்ப்பந்த — நிம்மதியற்ற — நிலையிலில்லை. அங்கே தாய்மொழிதான் போதனாமொழி இதில் திருகுதாளங்கள் அங்கேயில்லை ஏனெனில் அங்கு நிகழ்வது சமஷ்டி அரசமைப்பு. அந்தப் பிரதேசத்தின் அதிகாரம் அந்தந்தப் பிரதேசத்திலேயே விடப்பட்டிருக்கின்றது!

கீழே குறிப்பிடப்படும் ஒவ்வொரு வசனத்தையும் வாசிக்கும் பொழுது இலங்கையிலிருக்கும் நிலபரத்தை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டால் நாம் ஐக்கிய முன்னணிச் சோஷலிசத்தில் அனுபவிக்கும் சுகபோகங்களைப் பெரிதும் உணர்ந்து கொள்ள முடியும்;

கியூபெக் அரசியல் எல்லாப் பாடசாலைகளிலும் போதனாமொழி தாய்மொழியே யாகும். பிரெஞ்சு மொழியிலும் ஆங்கில மொழியிலும் கல்வியூட்டும் பாடசாலைகள்

### 'வரலாறு' கூறுவது

எல்லா மாவட்டங்களிலும் தாராளமாக உண்டு. 85% ஆக இருக்கும் பிரெஞ்சு மொழிப் பாடசாலைகளில் 5ம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கட்டாய பாடம். ஆங்கிலம் போதனா மொழியாக இருக்கும் பாடசாலைகளில் 3ம் வகுப்பிலிருந்து பிரெஞ்சு மொழி கட்டாய பாடம்.

ஆங்கிலப் பெரும்பான்மை அரசாகிய ஒன்ராறியோவில் 11 வீதமான மக்கள் பிரெஞ்சு மொழி பேசுபவர்கள்: இங்கே பிரெஞ்சு மொழி பேசும் குழந்தைகளுக்குத் தனி பாடசாலைகள் அமைக்கப்படுவதைச் சட்டம் நிர்ப்பந்திக்கிறது;

சிறுபான்மையினரின் பிரெஞ்சுப் பாடசாலைகளை நிர்வகிப்பதற்கு ஒன்ராறியோ அரசில் பிரெஞ்சுப் பாடசாலைகள் அதிகாரி என ஒரு அதிகாரி இருக்கின்றார்—இலங்கையிலோ?

### பல்கலைக் கழகங்கள்

வடக்கு மாகாணத்திற்கு ஒன்றும் கிழக்கு மாகாணத்திற்கு ஒன்றும் என 2 பல்கலைக் கழகங்கள் தமிழ் பேசும் மக்கள் தலைமீது கேட்காமலே இதோ விழுந்து விடுகிறோம் அதோ விழுந்து விடுகிறோம் என்று பயமுறுத்திக் கொண்டு நிற்கும் பொழுது கனடா நாட்டின் நிலைமையைப் பார்த்துக் கொள்வோம்:

### சாக்கடையில் தமிழ்

இலங்கையில் தமிழ் சாக்கடையில் வீசப்பட்டிருக்கும் நிலையில், மாகாண பல்கலைக் கழகத்தில் சிங்களத்தையும் போதனா மொழியாக்கும் திருப்பணியில் பலர் காவடி எடுத்து நிற்கும் காலத்தில் கனடாவின் நிலை என்ன என்று பார்ப்போம்.

அங்கே லவால், மொன்றியோல், ஷேபுறுக், ஒட்டாவா,

(6-ம் பக்கம் பார்க்க)

## ஒற்றையாட்சி நாடாக இருந்த கனடா சமஷ்டி நாடாக மாறிய வரலாறு!

### அடக்குமுறையும் போராட்டங்களும்

1840ல் இவ்விரு மாகாணங்களும் கனடா மாகாணம் என்ற பெயருடன் ஒற்றையாட்சி ஆக்கப்பட்டன—சிறுபான்மையினர் ஒதுக்கப்பட்டார்கள். பாராளுமன்றவிவகாரங்களில் ஆங்கிலம் மாத்திரமே ஆட்சிமொழியாக்கப்பட்டது. ஆனால் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்ப்புக்கள் வழங்கப்பட்டன.

1842இல் இந்த மொழிச் சட்டத்திற்கெதிராகப் பிரெஞ்சுப் பிரதிநிதிகள் குழப்பஞ்செய்தனர். சட்டத்துக்கு மாறாகப் பிரெஞ்சு மொழியில் தமது உரைகளை நிகழ்த்தினார்கள். இங்குள்ளது போன்று சிங்கள அரசுக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும்! எதிர்த்து நிற்கக்கூடாது; தன்மானமற்று அடிபணிந்து போய்விடவேண்டும் என்று யாரும் கூறும் அளவிற்குத் தன்மானமற்றிருக்கவில்லை இந்தப் போராட்டத்தின் விளைவாக 1848ல் 6 ஆண்டுகளுக்கிடையில் ஆங்கிலம் மாத்திரமே என்ற ஆட்சிமொழிச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டு, ஆங்கிலம் பிரெஞ்சு ஆகிய இரு மொழிகளும் ஆட்சிமொழியாயின! அடிக்குமேல் அடி விழுந்தால் அம்மியும் நகராதா? கனடா மாகாணத்தின் பிரெஞ்சுச் சிறுபான்மையினரின் பிரதேசமாகிய கியூபெக் (இல 5.) மீண்டும் தனி மாகாண அரசாகப் பிரகடனமாயிற்று. ஒன்ராறியோ அரசிலே (இல. 6.) ஆங்கில மொழி பேசுவோர் பெரும்பான்மையினர். இவ்விரு அரசுகளும் நோவா ஸ்கோஷியா [இல. 2] நியூ பிறன்ஸ்விக் (இல. 3.) ஆகிய பிரதேசங்களுடன் 4 மாகாண அரசுகளைக்கொண்ட ஒரு சமஷ்டி அரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது 1867இல். ஏனைய மாகாணங்கள் பின்னர் சமஷ்டியிற் சேர்க்கப்பட்டன.

### புதிய அரசமைப்புத் திட்டம்

[illegible] சமைப்புத் திட்டத்தில் சிறு பான்மையினர் உரிமைகள் வலியுறுத்தப்பட்டன.

### நீதித்துறை உரிமைகள்

பிரிட்டிஷ் அமெரிக்கச் சட்டம் மேலும் அளித்திருக்கும் ஏற்பாடுகளாவன:—

உயர் நீதிமன்றம், வருமானவரி மேன் முறையீட்டு நீதி மன்றம் ஆகிய சமஷ்டி நீதி மன்றங்களிலும் கியூபெக் மாகாணத்திலும் இரு மொழிகளும் பாவிக்கப்படும்.

உயர் நீதி மன்றத்தின் 9 நீதியரசர்களுள் 3 நீதியரசர்கள் கியூபெக் மாகாணத்திலிருந்து நியமிக்கப்பட வேண்டும்.

நீதிமன்றத் தீர்ப்புகள் தொகுப்புகள் பிரெஞ்சு மொழி பேசுபவர்களினால் பிரான்சிலிருந்து கொண்டு வரப்பட்டவை. இதனால் கியூபெக் நீதி மன்றங்கள் தீர்ப்புவழி மரபுச் சட்டங்களுக்கு (Precedents) பிரான்சிலுள்ள நீதி மன்றத் தீர்ப்புக்களை மேற்காட்டுவது பரவலாக நிகழ்கின்றது!

மென்றியோலிலும் சமஷ்டித் தலைநகரான ஒட்டாவாவிலும் உள்ள பல்கலைக் கழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ● பொன்னம்பலம் எமது முன்னாள் தலைவர்
# ● தமிழரசுக்கட்சியினர் ஈழத்து ஜின்னாக்கள்
# ● தமிழரசாருக்கு அமைச்சர் அஞ்சுகிறார்!

## அனுபவம் புதுமை

திரு. சி: அருளம்பலம்:.... "அமைச்சர்களிடம் எமது கட்சி உறுப்பினர்கள் போய்க் கெஞ்சிக்கொண்டு அலுவல்களைச் செய்விப்பது போல தாம் போகவில்லையென்று அவர் (பண்டிதரி இரத்தினம்) கூறியிருக்கிறார்!

திரு. வி. தர்மலிங்கம்:— உங்களுடைய கட்சி எது?

திரு: அருளம்பலம்:— ஆனால் நாளாந்தம் அதே அமைச்சிடம்—இன்றைக்கும் நாம் கண்டோம் — கீழ் மாகாண நண்பர்கள் இருவர் போய்வந்ததை — அவர்கள் போகிறார்கள்......"

திரு. இரத்தினம்:—அவர்களை வீட்டிலே கண்டீர்களா அல்லது அமைச்சரலுவலகத்திலே கண்டீர்களா?

அருளம்பலம்:—எங்கு எம்மைக்கண்டு நீங்கள் பேசினீர்கள் என்றுதான் முதலில் கேட்க விரும்புகின்றேன்.

இரத்தினம்:—ஒரு அமைச்சரிடத்திலே தன்னுடைய தொகுதித் தேவைக்காகப் போவது நியதி. அவர் (திரு: அருளம்பலம் ) இச்சபைக்கு புதிதாக வந்தவர் என்ற முறையிலே அவருக்கு அது தெரியாமலிருக்கலாம்!

## மாறிவிட்டீர்கள்!

அருளம்பலம்:— தமிழர்களுடைய பிரதிநிதிகளாகத்

## நாடாளுமன்றத்தில்
## அருளம்பலம் கூறியவை!

தான் நீங்களும் வந்திருக்கிறீர்கள். நாங்களும் இங்கே வந்திருக்கிறோம்.

தர்மலிங்கம்:—வந்து மாறிவிட்டீர்கள்!

### ஜீ. ஜீ. பொன்னம்பலம் மாஜித் தலைவரா?

அருளம்பலம்: — இங்கே மதிப்புக்குரிய ஊர்காவற்றுறைப் பிரதிநிதி எமது முன்னைநாள் தலைவர் திரு. ஜீ; ஜீ. பொன்னம்பலம் தாம் யூ. என். பி: க்கட்சியுடனேயே அன்று தொடங்கி பின் தொடர்ந்து ஒத்து வாழ்ந்து வருவதாக கூறியதாகத் தெரிவித்தார்."

தர்மலிங்கம்: — இன்றைக்கும் அவர்தான் தமிழ் காங்கிரஸ் தலைவர்!

அருளம்பலம்:—எமது முன்னை நாள் தலைவன் இங்கு இல்லாவிட்டாலுங் கூட......

தர்மலிங்கம்:—இன்றைக்கும் தமிழ் காங்கிரசிற்கு ஜீ; ஜீ. பொன்னம்பலம்தான் தலைவர்!

ஃ

அருளம்பலம்;- கடந்த அரசாங்கம் அந்த மாதிரியாக (தமிழர் விரோதமாக) நடந்துகொண்டிருந்தால், நீங்கள் அதற்கு ஒத்துழைப்பு கொடுத்துக்கொண்டிருந்த நேரத்தில் ஏன் அதைத் தமிழ் மக்களிடம் எடுத்துச்சொல்லவில்லை!

தர்மலிங்கம்:- நாங்கள் அரசாங்கத்தை விட்டுவிலகிய பிறகும் நீங்கள் யூ: என். பி. அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புக்கொடுத்துக் கொண்டிருந்தீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்!

அருளம்பலம்:- உங்களுடைய காலடியிலே தொட்டு வாழ்ந்த மக்கள், இந்த முறைத் தேர்தலிலே தென்னிலங்கையில் வாழ்ந்த அத்தனை தமிழ்மக்களும் உங்களுடைய சொல்லைக் கேட்டு வாக்களித்தால் தமிழ் மக்களுக்கு நாசம்தான் விளையும் என்பதை உணர்ந்து மக்கள் அரசாங்கத்துக்கு வாக்களித்த தன்பேரில்தான் இன்றைய அரசாங்கத்திற்கு தமிழ் மக்களிலே நம்பிக்கையிருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும்..."

தர்மலிங்கம்;- கடந்த தேர்தலில் உங்கள் கட்சி யூ. என்: பிக்கு வாக்களிக்கும்படி தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டது!

அருளம்பலம்:- அண்மையில் ரி.பி. இலங்கரத்ன அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்தபோது அவர்வந்த இடத்திலே உத்தியோகபூர்வமான பாராளுமன்ற அங்கத்தவர்களாகிய நீங்கள் (தமிழரசார்) அவரை வரவேற்க வந்ததை நான் ஸ்ரேசனில் காணவில்லை. அந்தமாதிரியாக நாங்கள் நடக்கவில்லை. அவரை வரவேற்க ஸ்ரேசனடிக்கு சென்றோம்!

### தமிழரசாருக்கு அமைச்சர் அஞ்சுகிறார்!

அருளம்பலம்;- "தமிழ் மக்களுடைய குழப்பங்களையும் அங்கே இருக்கின்ற நிலைமைகளையும் அறிந்தபடியால் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் உங்களை (தமிழரசாரை) அழைத்து "இப்படி வரப்பேரகின்றேன் அதில் கலந்து கொள்ள வாருங்கள்" என்று கூப்பிட்டிருப்பார்; அல்லது நீங்கள் கறுத்தக்கொடி காட்டப் போகின்றீர்களோ என்ற பயத்தில் கூப்பிட்டிருப்பார். இனிமேல் கறுப்புக் கொடி காட்டமாட்டீர்கள் என்று அவர்கள் நம்புகின்றார்கள்..."

ஃ

அருளம்பலம்:- இந்தநாட்டிலே வாழும் மக்களை தமிழ் மக்கள் சிங்கள மக்கள் என்ற வித்தியாசத்தோடு வாழப்பண்ணி அந்தப் பிரிவினையை தொடர்ந்தும் உண்டாக்கிக் கொண்டுவந்தவர்கள் நீங்கள்! (தமிழரசார்)

தர்மலிங்கம்:- வித்தியாசம் இல்லையா?

அருளம்பலம்:- அந்த வித்தியாசத்தை உண்டுபண்ணியது நீங்கள்!

தர்மலிங்கம்:- இப்போது அந்த வித்தியாசம் இல்லையா?

அருளம்பலம்:- அந்த வித்தியாசத்தை உண்டாக்கியது நீங்கள்தானே! பாரத கண்டம் ஒரே கண்டமாக இருந்த காலத்தில் பாகிஸ்தான் இந்துஸ்தான் என்று எந்தமாதிரி வந்தது? உங்களைப் போன்ற ஒருவர் இருந்தபடியால்தான் அவ்விதம் நடந்தது. இந்நாட்டை நாங்கள் பிரிக்க மாட்டோம்; உங்களைப் போன்ற ஜின்னாக்கள் எங்களுக்கு தேவையில்லை..."

ஃ

(7.1.71ம் திகதியிட்ட பாராளுமன்ற ஹன்சார்ட் புத்தகத்தின் 621, 622, 623, 624, 625, 626, 627, 628 பக்கங்களிலிருந்து எடுக்கப்பட்டவை)

---

## அத்தியாயம் (2)

# தத்தை விடு தூது

கவிதை பிறந்தபிற்பாடும் கூட சரவணனின் துன்பம் ஒழிந்தபாடாக இல்லை. மல்லிகை, சண்பகம், கோங்கு, மந்தாரை வெட்சி மலர்களுடன் கூடிய புல்பூண்டுகள் நிறைந்த தோட்டம் அவன் கண்ணுக்கு விருந்தாகியுளது. அந்தத் தோட்டத்திலே அவன் சகோதரன் கனகசுந்தரமும், அவனும், சிவகாமியும் கூடி விளையாடியதும் பந்தடித்ததும் அவன் நினைவுக்கு வருகின்றன சிவகாமி பந்தைக் கனகசுந்தரத்திற்கு எறிவது போற் பாவனை செய்துவிட்டு தனக்கு எறிவதும் அதனால் கனகசுந்தரம் சிவகாமியைக் குட்டுவதற்காகத் துரத்துவதும் அவள் ஓடி ஒழிந்துகொள்வதும் திரும்பி அதுவே ஒருபுது வித விளையாட்டாக மாறிவிடுவதையும் நினைத்தபோது அவனுக்குச் சிரிப்பாக இருந்தது.

கனகசுந்தரம் அனேகமாகத் தனித்துத்தான் விளையாடுவான். சரவணனும் சிவகாமியும் வற்புறுத்தினால் மட்டும் சேர்ந்து கொள்வான். மற்ற வேளைகளில் சரவணனும் சிவகாமியும் தனித்தே விளையாடுவார்கள் அதுதான் அவர்களுக்குப் பிடிக்கும். அப்பா, அம்மா விளையாட்டு சின்னச் சோறு கறி சமைத்தல் இடையில் கனகசுந்தரம் புகுந்து ஏதாவது குழப்பத்தை உண்டு பண்ணி விடுவான். அவர்கள் கட்டும் வீட்டை உடைத்தோ, சோறுகறியைத் தின்றோ, பொம்மைகளைத் திருடியோ சரவணனின் ஆத்திரத்தைக் கிளப்பி விடுவான். அவன் அழுது கொண்டே சென்று தன் தாயிடம் முறையிடுவான். தாய் அவனை அணைத்துச் சமாதானஞ் செய்து கனகா நீ ஏன் போய் அவர்கள் விளையாட்டைக் குழப்புகிறாய். பிற்கால வாழ்க்கைக்கு அவர்கள் இப்பவே ஒத்திகை பார்க்கிறார்கள் என்று கூறிச் சிரிப்பாள்.

சில வேளைகளில் மல்லிகைச் செடி நிறைய மலர்ந்திருக்கும். கனகசுந்தரம் அவற்றைப் பொறுக்கி எடுத்துத் தன் தாயாரிடங் கொடுப்பான். அவள் அதை அழகான மாலைகட்டி சிவகாமி அங்கு வரும்போது அவள் தலையிற் சூடிவிடுவாள். சரவணனுக்கும் அப்படிச் செய்ய வேண்டும் போற் தோன்றும். தானும் பூக்களைப் பறித்து தனக்குத் தெரிந்த மாதிரி ஒரு மாலை கட்டி அதைச் சிவகாமியிடம் ஆசையோடு கொண்டுபோய்க் கொடுப்பான். சிறுவர்கள்தானே! விபரம் தெரியாத வயது. அவன் எவ்வளவு ஆசையோடு அதைக் கொடுப்பானோ அவ்வளவு நிஷ்டூரத்தோடு அவள் அதன் மதிப்பை இகழ்வாள். அத்துடன் நில்லாது அதை அவன் மொட்டந் தலையிலேயே சூடவும் முற்படுவாள். அப்போது அந்த மலர்கள் எல்லாம் உதிர்ந்து பூமியிற் சிதறும். அதை பார்த்த கனகசுந்தரம் கை கொட்டிச் சிரிப்பான்? சரவணனுக்கு [illegible] வேண்டும் போல் இரு[illegible] அவ[illegible] ஓடிச் சென்று [illegible] முறையிடுவான். அவ[illegible] படியே [illegible] கேலி [illegible] குரல் கொடுப்பாள். அத்துடன் அவன் கோபந் தணிந்து விடும்.

அந்த இனிய நினைவுகள் நிறைந்த தோட்டம் அவன் மனதில் ஒரு கவிதையைப் பிறக்கச் செய்து விடுகிறது. அவன் வாய்விட்டே அதைப் பாடுகிறான்.

மல்லிகை சண்பகங் கோங்கு
மந்தாரை வெட்சியுடன்
புல்லினமும் பலவளரும்
பூம்பொழி லிலக்காலம்
மெல்ல மெல்ல பந்து கொடு
விளையாடும் காலவாடாய்
சொல்லியதும் மறந்தனளோ
சுகமே வினவுதியால்
தோகையெனைத் துறந்தனளோ
சுகமே வினவுதியால்.

திடீர் என ஏதோ நினைத்துக் கொண்ட சரவணன் தன் வீட்டின் அடிவளவில்

திருமதி
ந. பாலேஸ்வரி

இருக்கும் ஈரப்பலா மரநிழலிற் சென்று அமர்ந்து கொள்கிறான். அகன்று வானோங்கி வளர்ந்திருந்த அம்மரநிழல் குளிர்ச்சியாக இருந்தது. அவன் மனதுக் [illegible] மல்லி[illegible] மரங்களிலிருந்து நறுமணம் வீசிக் கொண்டிருந்தது. உடனே பழைய நினைவுகள் அவன் மனதில் மீட்கப்படுகின்றன: எப்போதோ ஒருநாள் சிவகாமி பொறுக்கி எடுத்த பூக்களையெல்லாம் சரவணன் விளையாட்டாகக் கீழே தட்டி விடுகிறான். அதைத் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த கனகசுந்தரம் அவ்விடத்திற்கு வந்து சரணனை அடிக்கக் கையோங்கும் போது அவனைத் தடுத்து நிறுத்திவிடுகிறாள் சிவகாமி. அப்போது அவன் அவளை நன்றிப் பெருக்கோடு பார்க்கிறான்: உடனே கீழே சிதறிய மலர்களை எல்லாம் ஒன்று சேர்த்து மாலையாக்கி அவள் எதிர்பாராதவிதமாக அவள் கழுத்தில் அணிந்துவிடுகிறான். சிவகாமியும் மல்லிகைச் செடியின் ஒரு துண்டைப் பிய்த்து அவன் கழுத்தில் மாலையாக அணிந்து விடுகிறாள். அப்போது இருவரும் கைகொட்டிச் சிரித்த சத்தங்கேட்டு சரவணன் தாயாகிய வள்ளியம்மையே அங்கு வந்து விடுகிறாள்.

குழந்தைகள் இருவரையும் அளவு கடந்த மகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்டு டேய் கனகா... உன்ர தம்பி மாப்பிள்ளைக் கோலத்தில் இருக்கிறான் கெட்டி மேளங் கொட்டடா என்று மகிழ்ச்சி மேலீட்டாற் கூற ஏதோ செய்து கொண்டிருந்த கனகசுந்தரம் ஓடோடி வந்து பக்கத்துப் பூவரசுமரத்தில் ஒரு இலையைப் பிய்த்து சூழல் செய்து ஊதிக்கொண்டே இரண்டு கையாலும் ஒரு தகரத்தில் அடித்து மேளங் கொட்டினான். எங்கோ போய்விட்டு அப்போதுதான் திரும்பி வந்து கொண்டிருந்த தம்பிமுத்துப்பிள்ளை இந்தக் காட்சியைக் கண்டு அப்படியே சொக்கிப்போய் நின்றுவிட்டார்.

"அப்பா மாப்பிள்ளையையும் பெண்ணையும் ஆசீர்வாதம் பண்ணுங்கப்பா" என்று கனகசுந்தரம் வேடிக்கையாகக் கூற அவர்கள் இருவரையும் கணவனிடம் அழைத்து வந்தாள் வள்ளியம்மை. போக்கிரிக் குட்டிகள் என்று செல்லமாகக் கூறிவிட்டு இருவரையும் இரண்டு பக்க இடுப்பிலும் தூக்கி வைத்துக்கொண்டார் தம்பிமுத்து. பெண்ணும் மாப்பிள்ளையும் பல்லக்கில் போறாங்க அம்மோவ் என்று பலமாகக் குரல் கொடுத்தான் கனகசுந்தரம். சரவணனின் கண்களில் மகிழ்ச்சி தாண்டவமாடுகிறது. இளமைப் பருவத்து எந்த நிகழ்ச்சியை மறந்தாலுங் கூட இதை மறக்க முடியுமா? அல்லது இது மறக்கக் கூடிய ஒன்றா? அவன் ஒரு ஆண் மகனாக இருந்தும் அவனால் இந்த சம்பவத்தை மறக்க முடியவில்லையானால் ஒரு பெண்ணாக இருக்கும் அவளால் இவற்றையெல்லாம் எழிதில் எப்படி மறக்க முடிந்ததோ? இந்த இனிய நினைவுகள் அவள் உள்ளத்தில் பசுமையாகி இருக்குமாக இருந்தால் முத்துக்குமரனை மணக்க அவள் ஒருபோதுஞ் சம்மதித்திருக்க மாட்டாள்; சம்மதித்திருக்கவும் முடியாது. இன்னும் சின்னாளில் அவள் திருமணஞ் செய்து கொள்ளப்போகிறாளே. அப்படியாயின் அவளது பூரண சம்மதமின்றி இந்தத் திருமணம்

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘மலையகத் தமிழர் சிங்களவர்களுடன் இரண்டறக் கலக்க வேண்டும்’



## இப்படிக் கூறினார் எச். எம். பி. எரிமலையானார் சக்தீபாலையா!

### மலையக எழுத்தாளர் மன்ற விழாவில் ஏற்பட்ட கருத்து மோதல்

மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் 7-வது ஆண்டு விழாவும் கலைவிழாவும் தைத் திருநாளன்று அட்டன் அர்ச். ஜோன் பொஸ்கொஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. காலை உத்தியோகத்தர் தெரிவும், விண்ணப்பங்களும், உபவிதி விளக்கங்களும் நடைபெற்றன.

மாலை நிகழ்ச்சிகள் கலைவிழாவாகவும், பரிசுபெற்ற எழுத்தாளர்களுக்குப் பரிசளிப்பு விழாவாகவும், நடைபெற்றதுடன் சிறப்புச்சொற்பொழிவுகளும் இடம் பெற்றன. மலையகச் சிறுகதைத் தொகுப்பாகிய "கதைக் கனிகள்" என்ற நூலை அட்டன் நீதவான் திரு. சண்முகலிங்கம் அவர்கள் வெளியிட்டு வைத்தார். தோட்டத் தொழிலாளரின் மகன் தோட்டத் தொழிலாளி என்ற நிலை இன்று அருகி வருவதாகவும் இன்னும் பத்தாண்டு காலத்தில் தோட்டத் தொழிலாளர் நிலை உயர்வடைந்து விளங்குவதைத் தான் பார்த்து மகிழப் போவதாகவும் அவர் தமது பேச்சில் குறிப்பிட்டார். தமிழ் நூல்கள் சிங்கள மொழியிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டுமென்பதே தமது வேண்டுகோளாகும் என்றும் தன் கருத்தைத் தெரிவித்தார்.

அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி அதிபர் திரு. இரா. சிவலிங்கம் கதைக் கனிகள் பற்றிச் சிறந்த ஆய்வுரை ஒன்றை நிகழ்த்தியதோடு விரைவில் கட்டுரைக் கனிகள் என்ற தொகுப்பு நூலொன்றும் வெளியிட வேணடுமென்றும் கேட்டுக் கொண்டார்.

#### அரசாங்கத்துக்கு வக்காலத்து

அதன் பின்னர் பேசிய ஏ. வி. பி. கோமஸ் தனது பேச்சை அரசியல் கலப்புள்ளதாகஆக்கி அரசாங்கத்திற்கு வக்காலத்து வாங்கினார். யாழ்ப்பாணத் தமிழரும்மட்டக்களப்புத் தமிழரும் தான் தமிழை வளர்க்கிறார்களா என்று ஒரு கேள்வியையும் எழுப்பி அதற்கு விடையாக அவர்கள் தமிழை வளர்ப்பதற்குப் பதிலாகக் கொலை செய்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற தகுதிக்காக ஒரு யாழ்ப்பாண எழுத்தாளர் சாகித்திய மண்டல அங்கத்தவராக முடியுமென்றால், சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற மட்டக்களப்பு எழுத்தாளர் ஒருவர் சாகித்திய மண்டலத்தில் அங்கத்தவராக முடியுமென்றால் மலையகத்திலிருந்து இருமுறை சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற ஒருஎழுத்தாளர் ஏன் அங்கம் வகிக்க முடியாது என்றும் ஒரு போடு போட்டார்.

#### பிரிவினைப் பேச்சு

யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் தான் தமிழ் அறிஞர்கள் இருந்தார்களா? எம்மிடையே தமிழறிஞர்கள் இல்லையா? எம்மிடையேயும் இருக்கின்றார்கள் என்றார். ஈற்றில் அரசாங்கத்தின் சின்னமாகிய கையைப் பற்றியும் அக்கையிலுள்ள விரல்களைப் பற்றியெல்லாம் விளக்கம் தந்த அவர் ஒற்றுமை இன்று அவசியம் என்று இடித்துரைத்தார். இப்படி ஒற்றுமை வேண்டுகோளை விடுத்த அவர் இடையிடையே தமிழ் மக்களைப் பிரித்துப் பேசிய முன்னுக்குப் பின் முரணான பேச்சைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. கூட்டத்தில் பேசிய எவரும் யாழ்ப்பாண மட்டக்களப்புப் பிரச்சினையைக் கிளப்பாமல் இருக்க இவர் சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்துக் கொண்டார். அவருக்குப் பேசுவதற்குப் பத்து நிமிடம் கொடுக்கப்பட்டதாயினும் கூறியவற்றைத் திரும்பத் திரும்பக் கூறிச் சுமார் 45 நிமிட நேரத்தை வீணாக்கினார். அவர் கருத்துக்களைப் 10 நிமிடத்திற்கு முன்பே முடித்திருக்கலாம். அவர் திரும்பத் திரும்பக் கூறியவற்றைக்கூறி நேரத்தைப் போக்கியதன்றி உருப்படியான நல்ல கருத்துக்களை வெளியிடத் தவறிவிட்டார். இக்கூட்டத்தில் மலையக எழுத்தாளர்களும் பொது மக்களும்தான் கலந்து கொண்டிருப்பார்கள் என்ற எண்ணத்தில் தான் அவர் பேசியிருக்கக் கூடும்.

ஆனால் இக்கூட்டத்திற்கு வந்திருந்து சிறப்பித்தவர்களில் யாழ்ப்பாணத் தமிழர்களும் கணிசமானவர்கள்: அட்டன் நீதவான், வட்டாரக் கல்வி அதிகாரி, மூன்று

### மலையகத்திலே........

#### மலையக நிருபர் புத்தொளி

பாடசாலைகளின் தலைவர்கள் ஒரு சில எழுத்தாளர்கள் யாழ்ப்பாணத்தவர்கள். அப்படியிருந்தும் அவர்கள் முன்னிலையில் சந்தர்ப்பத்தைத் தெரிந்துகொள்ளாது வாயில் வந்தவற்றை வேண்டாத கருத்துக்களை அவர் கூறியதைப் பலர் தமக்குள்ளே ஆட்சேபித்துக் கொண்டனர்.

#### எச். எம். பிக்கு எதிர்ப்பு!

திரு. ஏ. வி. பி. கோமஸ் பேசிய பின் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிர்வாக அதிபர்களில் ஒருவர் ஆன எச். எம். பி. முகைதீன் பேசினார்! அவர் பேச்சு அங்கிருந்த மலையகத் தமிழ் மக்கள், எழுத்தாளர் மத்தியில் பலத்த கண்டனத்தைத் தோற்றுவித்தது. யாழ்ப்பாணத்தவரும், மட்டக்களப்பு மக்களுமல்ல தமிழை வளர்ப்பவர்கள், சிங்கள மக்கள் மத்தியில் வாழும் நாம் தான் தமிழை வளர்ப்பவர்கள் என்றார்.

உணர்ச்சிக் கவிஞர் திரு. காசி ஆனந்தனின் கவிதை ஒன்றைப் படித்து ‘செத்த பின்னும் தமிழ் மணக்க வேண்டுமாம். இப்படியான பாடல்கள் இன்று வேண்டியதில்லை’ என்றார்.

யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர் என்று அவர்கள் அழைக்க முடியுமானால் நீங்கள் ஏன் மலையகத் தமிழர் என்று உங்களை அழைக்கக் கூடாது என்று கேட்ட முகைதீன் ஏன் இன்னும் இந்தியத் தமிழர் என்று ஏன் அழைக்க வேண்டும் என்றும் கேட்டார். நாம் சிங்களத்தில் பேச வேண்டியிருக்கும் போது சிங்கள மக்களுடன் ஏன் இரண்டறக் கலக்க முடியாது என்றும் ஒரு போடு போட்டார். நீங்கள் இனி இந்தியத் தமிழர் என அழைக்காது மலையகத் தமிழர் என அழையுங்கள் என்று ஆலோசனையும் கூறினார்.

#### சல சலப்பு

இக்கருத்துக்கள் அங்கிருந்த மக்கள் மத்தியில் சல சலப்பை ஏற்படுத்தியது. கூட்டம் முடிந்தது வெளி வந்ததும் வெளியில் பலர் எச். எம். பி. யின் கருத்தைக் கண்டித்துக் கருத்துப் பரிமாறினர். இக்கருத்தை மிக உணர்ச்சியுடன் கவிஞர் சக்தீபாலையா எதிர்த்து அங்கு வந்த எழுத்தாளர்களுடன் பேசினார்: அத்துடன் நில்லாது எச். எம். பி. யுடன் சென்று வாதிட்டார்.

அப்போது எச். எம். பி. யுடன் திரு. இரா சிவலிங்கமும் இன்னும் சில எழுத்தாளர்களும் உரையாடிக் கொண்டிருந்தனர். கவிஞர் சக்திபாலையா எச். எம். பி. யிடம் தெரிவித்த கருத்துக்களை எச். எம். பி. கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

#### என்ன தவறு?

‘இந்தியத் தமிழர் என்று சொல்லுவதில் என்ன தவறு இருக்கின்றது. நாம் இந்தியத் தமிழர் என்று சொல்வதில் வெட்கப்படவில்லை. எமது உரிமைகளைத் தாருங்கள்: உங்களுடன் நாங்களும் ஒற்றுமையாக இந்த நாட்டிற்கு விசுவாசமாக இருக்கிறோம் என்று தான் இந்த அரசாங்கத்தைக் கேட்கிறோம். அரசாங்கம் எமது உரிமைகளைத் தரவில்லையே.

[10ம் பக்கம் பார்க்க]

---

<u>கே. பி. இரத்நாயகாவிடம் ஒரு கேள்வி!</u>

## தமிழன் மட்டும் மரக்கட்டையாக வாழவேண்டுமா?

‘நமது நாட்டையும் மொழியையும் மக்களையும் இனத்தையும் காப்பாற்ற நாம் எமது உயிரைக்கூட தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டும்: தேசிய மொழிக்காக தியாகம் செய்த பிக்குவுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவோம் என்று நாம் எடுத்த சபதத்தை இன்று நிறைவேற்றி விட்டோம்.’

—தமிழ் மொழிச் சட்டவிதிகளை எதிர்த்து சூடுபட்டிறந்த பௌத்த பிக்குவின் நினைவுச் சின்னத் திறப்பு விழாவில் பிரதமர் சிறிமாவோ பேசியது!

ஃ

(‘தமிழ் மொழிச் சட்டவிதிகளை எதிர்த்து இறந்த) இரத்தினசார தேரோ மூற்போக்குக் கொள்கைக்காகவே தமது உயிரை ‘தியாகம்’ செய்தவர்.

—பீட்டர் கெனமன் (அதே விழாவில் பேசியது.)

ஃ

(‘தமிழ்மொழிச் சட்டவிதிகளைஎதிர்த்துப்போராடி உயிரை விட்ட) பௌத்தபிக்கு நாட்டின் தேசியத் தலைவராகி விட்டார். நீதிக்கும் சமத்துவத்துக்குமாக உயிர் விட்ட மாவீரர் அவர்’

—அதே விழாவில் டாக்டர் என். எம்.

ஃ

‘தமிழ் மொழிச் சட்ட விதிகளை சட்ட புத்தகத்திலிருந்து அகற்ற கூட்டணி அரசு நடவடிக்கையெடுக்கும்’

—கலாசார உதவியமைச்சர் சோமவீர சந்திரசிறி (டெயிலி மிரர் 15-1-71)

ஃ

‘தமிழ் மொழிச் சட்ட விதிகளை இரத்து செய்வதற்கு இது தகுந்ததருணமல்ல—சந்தர்ப்பம் நேரும் போது அதைச் செய்வோம். புதிய அரசியல் சட்டத்தில் இச்சட்டவிதிகள் [illegible] (புதிய அரசியல் சட்ட அடிப்படைத் தீர்மானங்களின் படி தமிழ்மொழி சட்ட விதிகள் நீக்கப்பட்டு விட்டது.)

—சமூக சேவை அமைச்சர் ரி. பி. தென்னக்கூன் (டைம்ஸ் ஆப் சிலோன் 13-1-71)

ஃ

‘வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் படையெடுத்து வந்தவர்களின் பரம்பரையினர். அவர்களுக்கு எந்தச் சலுகைகளையும் வழங்க சிங்களமக்கள் தயாராக இல்லை!

-மூதவையில் நீதியமைச்சர் ஜெயமானே

ஃ

‘ஈழத்தின் வடபகுதியிலுள்ள தமிழரையும், தென்னிந்தியத் தமிழரையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் போது தங்களைச் சிறுபான்மையினர் என்று சிங்களவர் கருதுகிறார்கள். இதனால் சிங்கள மொழிக்கும் சிங்கள இனத்துக்கும் விசேட பாதுகாப்பு வேண்டும் என்று அவர்கள் கோருவது நியாயமானதே. சிங்களம் மட்டும் கொள்கையை அதனால் நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்’

—அமைச்சர் லெஸ்லி குணவர்தன (21-12-70 டெயிலி நியூஸ் கட்டுரையில்)

ஃ

இவ்வளவையும் படித்து விட்டு யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் இன மொழியுணர்வுக்கு சவால் விடும் முறையில் கே. பி. இரத்நாயகா செய்திருக்கும் உபதேசத்தையும் கீழே படியுங்கள்!

ஃ

‘தமிழை சிங்களவர் அழித்து விடுவார்கள் என்று கூறுகிறார்கள். எந்த மொழியையும் அழிக்க முடியாது. யார் ஒரு மொழியை அழிக்க முயன்றாலும் அம்மொழி வளருமேயன்றி அழியாது. இன, மத, மொழியால் ஏன் நாம் பிரிந்திருக்க வேண்டும்?’

—கே. பி. இரத்நாயகா (ஈழநாடு 18-1-71)

ஃ

இன, மத, மொழியால் பிரிந்திருக்க கூடாது என்று அமைச்சர் கூறுவதன் அர்த்தம் என்ன? எல்லோரும் ஒரே மொழி பேசும் மக்களாக—ஒரே மதத்தைப் பின்பற்றுபவர்களாக மாறிவிடுங்கள் என்பதா? எல்லோரும் சிங்கள பௌத்தர்களாகி விடுங்கள் என்பதா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

# மொழிகாக்கும் போரில் குதித்திட தமிழ் இளைஞர்களே விரைந்து வாரீர்!

பண்டிதர் கா. பொ. இரத்தினம்

தமிழ் மொழியின் உரிமைகளை இந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் பறித்துக் கொண்டுவருகின்றது. இதனை எவரும் மறுக்க முடியாது. முன்னர் தமிழிலும் வெளியிடப்பட்ட நிருவாக அறிக்கைகள் சுற்றறிக்கைகள் முதலியனவற்றில் இப்பொழுது தமிழ் புறக்கணிக்கப்படுகின்றது. அமைச்சுக்கள் அனுப்பும் கடிதங்கள் அறிக்கைகள் பலவற்றில் தமிழ் இடம்பெறவில்லை. இவற்றிலே ஆங்கிலத்திற்குக் கொடுக்கப்படும் இடமும் கூடத் தமிழுக்குக் கொடுக்கப்படவில்லை. இ. போ. ச., கல்வி அமைச்சு, தொழில் இணைக்களம் முதலியவற்றில் இருந்து தனிச் சிங்களத்திலேயே தமிழ் மக்களுக்குக் கடிதங்கள் முதலியன அனுப்பப்படுகின்றன.

## தமிழ் மொழி பெயர்ப்பும் இல்லை!

ஆங்கிலம் தெரிந்தவர்கள் தமிழில் கடிதங்கள் அனுப்பினால் அவர்களுக்குமறுமொழி ஆங்கில மொழி பெயர்ப்புடன் சிங்களத்தில் அனுப்பப்படுமென்றும் தமிழ் மொழி பெயர்ப்பு அனுப்புவதில்லையென்றும் மொழிச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சர் கௌரவ பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எனக்குப் பிரதிநிதிகள் சபையில் மறுமொழி தந்தார். இது சட்டத்திற்கு மாறானதென்றால் வழக்குத் தொடருமாறு கூறினார். ஆனால், அவரே எனக்குச் சிங்களத்திலும் தமிழிலும் கடிதங்கள் அனுப்பி வருகின்றார்.

அரசாங்கத்திற்குத் தமிழில் எழுதும் கடிதங்களுக்கு தமிழ் மொழி பெயர்ப்பை மட்டுமன்றித் தமிழிலேயே மறுமொழியைப் பெறும் சட்ட உரிமை இன்று தமிழ் மக்களுக்கு உண்டு. இந்தச் சட்டத்தை அழிக்குமாறு சிங்களத் தீவிரவாதிகள் இன்று குரல் எழுப்புகின்றனர். அரசியலமைப்பு மாற்றத்தால்— போதிய ஆட்சி உரிமையினால் — மட்டுமே தமிழ் மக்கள் இழந்தஉரிமைகளைப் பெறலாம். சட்டத்தினால்—நீதிமன்றத்தீர்ப்பினால் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்திஉரிமையை பெறமுடியாது.

## முந்திய அரசாங்கம் ஏமாற்றியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அரசாங்கம் தான் 1966 ல் நிறைவேற்றிய தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமாணங்களை நன்கு நடைமுறைப்படுத்தாமல் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டது. 'சிங்களமும் தமிழும்இந்நாட்டின்உத்தியோக மொழிகள்' எனும் சட்டம் 1944 தொடக்கம் 1956 வரை நாட்டில் நிலை பெற்றிருந்தது. இது 1956 இல் சிங்களம் மட்டும் சட்டத்தால் அழிக்கப்பட்டது. தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்ற அரசியல் உரிமையைப் பெற்றாலன்றிச் சட்டங்களின் உதவியைக் கொண்டோ ஆளுகின்றவர்களின் தயவினாலோ இந்நாட்டில் உரிமையுடன் வாழ முடியாது. இதனாலேயே இணைப்பாட்சிதான் தமிழ் மக்களுக்கு வேண்டுமென எங்கள் கட்சி போராடி வருகின்றது.

இப்பொழுது தமிழ் மொழிக்குச் சில துறைகளில் உள்ள உரிமைகளை சென்ற அரசாங்கத்தில் எங்கள் கட்சி பெற்று நிலைநாட்டிய சில உரிமைகளை இந்த அரசாங்கம் அழித்துக்கொண்டு வருகின்றது; சிங்களத்தை வலிந்து திணிக்கின்றது; தமிழ் தெரியாத உத்தியோகத்தர்களைத் தமிழ் பகுதிக்கு அனுப்புகின்றது. இவற்றை நான் பிரதம அமைச்சருக்குச் சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டேன். பிரதம அமைச்சர் கௌரவ பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவை நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருப்பதாக எனக்கு அறிவித்தார். கௌரவ பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கும் இதுபற்றி எழுதினேன். அவர் சிங்களத்துடன் ஆங்கிலத்தைப் பயன்படுத்தித் தமிழைப் புறக்கணிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்.

## சி. சு. க. அமைச்சர் குமாரசூரியர் திட்டம் எங்கே?

அரசகரும அலுவல்களில் ஆங்கிலம் இனி இல்லை. அதன் இடம் தமிழுக்கு குமாரசூரியர் திட்டத்தை அரசாங்கம் ஏற்றுவிட்டது. என்று 12-8.70 இல் தினபதி முதற் பக்கத்தில் ஒரு செய்தியை வெளியிட்டது. "தமிழரின்" சார்பில் அமைச்சர் அவைக்கு நியமிக்கப்பட்ட கௌரவ செ. குமாரசூரியரின் பெயருடன் வெளியான திட்டம் எங்கு நடைமுறைப் படுத்தப்படுகின்றதோ தெரியவில்லை! ஆனால் அமைச்சர் குமாரசூரியரே தமிழைப் புறக்கணிக்கிறார். எனது தமிழ்க் கடிதத்திற்குச் சிங்களத்தில் மறுமொழியும் ஆங்கில மொழிபெயர்ப்பும் அனுப்பியிருக்கின்றார். இப்படி ஏன் அவர் தமிழைப் புறக்கணிக்கின்றார் என்று தான் பிரதிநிதிகள் சபையில் கேட்ட கேள்விக்கு 'தபால்' திணைக்களத்தைப் புனரமைப்புச் செய்யும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் தமிழில் மறுமொழி அனுப்ப முடியாத நிலை தபால் அமைச்சுக்கு இருந்து வருகின்றது" என்று மறுமொழி கூறப்பட்டது. தமிழமைச்சர் தமிழைப் பேணும் முறை எப்படியிருக்கின்றது? இப்பொழுது அவர் சிங்களவர் தமிழர் கலப்பு மணப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கின்றார்!

## கௌரவ துடாவையின் சேவை!

கொம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரும் துணைக் கல்வி அமைச்சருமான கௌரவ துடாவை யாழ்ப்பாணம் வந்து மாலை மரியாதை, கைப்பிரம்பு முதலியன பெற்றபொழுது சிங்களத்தையும் தமிழையும் நடைமுறையில் நாள்தோறும் பயன்படுத்துவோம் என்று திருவாய் மலர்ந்தார். இவர் 6-1-71 இல் பிரதிநிதிகள் சபையில் எனது கேள்விக்குச் சமர்ப்பித்த மறுமொழி சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே உளது. தமிழில் இல்லை. ஏன் தமிழிலும் மறுமொழி தரவில்லையென்று இப்பொழுது எங்கள் கட்சி சபாநாயகரைக் கேட்டுளது?

## குத்துக்கரணம்

சமசமாசக் கட்சி மொழிக் கொள்கையில் 'அடித்த குத்துக்கரணம்' எல்லோருக்கும் தெரியும். சமசமாசக் கட்சியின் பொதுச் செயலாளரும் போக்குவரத்து அமைச்சருமான கௌரவ லெஸ்லி குணவர்த்தன அவர்கள் 'இலங்கையில வாழும் தமிழ் மக்கள் இலங்கையில் சிறுபான்மையராக இருந்தாலும் அவர்களைத் தென்னிந்தியாவில் வாழும் தமிழர்களோடு சேர்த்து நோக்குகையில் தமிழ் மக்களே பெரும்பான்மையினராகின்றனர். இலங்கையின் வரலாற்றைப் பற்றி ஒருவர் சிந்திப்பாராயின் இந்த இருபகுதியினருக்கும் இடையில் நடைபெற்ற போராட்டங்களே அதில் நிறைந்துள்ளதைக் காணலாம்,' எனவும்.

'மற்ற நாடுகளிலுள்ள சிறுபான்மைத் தேசிய இனத்தவர்களுக்கு என்னென்ன விசேஷ சலுகைகள் தேசிய ஒற்றுமையை உருவாக்க வழங்கப்படுகின்றனவோ, அது போன்று இந்நாட்டில் தேசிய ஒற்றுமையை நிலைநாட்டச் சிங்கள மக்களுக்கு வழங்கப்படவேண்டும்' எனவும் கூறியுள்ளார். தமிழர் பெரும்பான்மையினராகின்றபடியால் அவர்களுக்கும் அவர்களுடைய மொழிக்கும் பாதுகாப்போ, 'விசேட சலுகைகளோ' தேவையில்லை என்பது அவருடைய சமசமாசக் கட்சியின் புதிய கொள்கையாகும்.

## பிரதமரின் அறிவுரை

இச் சூழ்நிலையில் தமிழ் மக்கள் இன்னும் உறங்கிக் கொண்டிருந்தால் இந்நாட்டில் தமிழ் மொழியும் தமிழ் இனமும் அழிந்துவிடும். 1966ஆம் ஆண்டு சனவரி 8ஆம் திகதியன்று தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் பிரமாணங்களை எதிர்த்து நடாத்தப்பட்ட ஊர்வலத்தில் பொலிசுத் துப்பாக்கிச் சூட்டால் பலியான தும்பராவ இரத்தினசார தேரோவின் நினைவுத் தூணைத் திரை நீக்கம் செய்த பொழுது பிரதம அமைச்சர் கௌரவ திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா 'இளைஞர்கள் தங்கள் இனத்தை மொழியைப் பாதுகாக்கத் தங்கள் உயிரையும் தியாகம் செய்ய வேண்டும்' என்று கூறினார்.

## பணிபுரிய வாருங்கள்

இந்த அறிவுரையைத் தமிழ் இளைஞர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். உயிரைத் தியாகஞ் செய்ய வருமாறு நாங்கள் அழைக்கவில்லை. தமிழியக்கத்தை எங்கும் பரப்புதற்கும், தமிழரைத், தமிழைப், போற்றச் செய்தற்கும், தமிழ் உரிமையை நிலைநாட்டுதற்கும் இயன்ற பணிபுரிய உறுதியும் ஊக்கமும் உள்ள இளைஞர்களை இன்றே அழைக்கிறோம். பாராளுமன்றத் தொகுதிகள் தோறும் தமிழியக்கத் தொண்டர்படை நிறுவ ஒழுங்கு செய்கின்றோம். இத் தொண்டர்படையில் சேர்ந்து தமிழுக்கும் தமிழினத்திற்கும் தொண்டு புரிய முன்வாருங்கள்.

## தமிழியக்கத் தொண்டர் முன்னணி உறுப்பினர் பட்டியல்

140. கி. அ. சிறீநாதன்; கொட்டாஞ்சேனை 141 ரா. சி, தங்கவேல் கொழும்பு-3 142- பெ. இராசதுரை கொட்டாஞ்சேனை. 143- அ. மனோகரன்; காரைநகர்.

144- ம. பா. யோசப், பண்டத்தரிப்பு. 145- இ. இராரத்தினம், வட்டுக்கோட்டை. 146- வேல்முருகதாசன். கொழும்பு-13. 147- செ, ஜோ. வின்சன்ட் பிரன்சிஸ் கொழும்பு-14.

148- சி. சங்கரப்பிள்ளை, ஆனைக்கோட்டை 149- த. தேவதாசன், கொழும்பு-13. 150- யோ. பவானந்தன் வவுனியா.

151- வ. சிவசிதம்பரம், வவுனியா; 152- இ. தருமலிங்கம், வவுனியா. 153- க. குகபாலன், வவுனியா.

154- மு. சிவபாதம் நெடுங்கேணி 155- க. நவரத்தினம், நெடுங்கேணி. 156- த. ம. பீற்றர்பொன்கலன்ட் நெடுங்கேணி. 157- த. ம. இந்திரன், நெடுங்கேணி.

158- த. ம. லீனஸ்பொன் கலன்ட் நெடுங்கேணி. 159- செ. பத்மநாதன் செம்பியன் பற்று. 160- சூ. அ. ஞானராசா, முல்லைத்தீவு. 161- வி. புவினேந்திரன், களுவாஞ்சிக் குடி 162- தி. கனகரத்தினம் களுவாஞ்சிக் குடி.

# மலையகத் தமிழர் சிங்களவர் . . .

(9-ம்பக்கத் தொடர்ச்சி)

இரு வாரங்களுக்கு முன் தோட்டங்களுக்கு வந்த சுற்றுநிருபம் தோட்டங்களில் பிறக்கும் குழந்தைகளை இந்தியத் தமிழர் என்றே பதிய வேண்டும் எனக் கேட்டது. இதற்கு என்ன சொல்கின்றீர்கள். சோசலிசம் சோசலிசம் என்று வெறும் வார்த்தைகளால் மக்களை மயங்க வைக்கக் கூடாது என்றார் கவிஞர்.

எச். எம். பி. யுடன் நின்ற இராசலிங்கமும் இன்னும் சிலரும் கவிஞரின் உணர்ச்சி பூர்வமான கருத்துக்களைக் கேட்டதும் அங்கிருந்து மறைந்து சென்றனர். அவர்கள் இப் பேச்சில் எதுவித அபிப்பிராயமும் சொல்ல முன் வரவில்லை.

## எச். எம். பி. பாலையா வாக்குவாதம்

எச். எம். பி: ஆரம்பத்திலேயே சிங்கள மக்களுடன் தமிழ் மக்கள் இரண்டறக் கலந்தால் இன்றுள்ள பிரச்சினைகள் எழுந்திருக்கா?

கவிஞர்: தமிழராகிய நாம் சிங்களத்தைப் படித்து சிங்களவராகிவிட வேண்டியதுதான் உங்கள் கருத்துப் படி.

எச்: எம்: பி: இல்லை வேருவலையில் நாலாபக்கமும் சிங்கள மக்கள் நடுவில் முஸ்லீம்கள் 800 வருடமாக வாழ்கிறார்கள். அவர்கள் சிங்களவராக மாறிவிடவில்லையே.

கவிஞர்: ஒரு சுனை உடனேயே கடலாகிவிட முடியாது. சுனை குளமாகி, ஆறாகி ஈற்றில்தான் கடலாக முடியும்.

எச். எம். பி: மக்களை விட நாடுதான் முக்கியம்.

கவிஞர்: 'நாட்டை விட மக்கள் தான் முக்கியம். மொழிதான் மக்களைப் பிரித்துக்காட்டுகின்றது. மொழியைக் கொண்டுதான் நாட்டை அறிகிறோம்.'

எச். எம். பி: இல்லை நாடு தான் முக்கியம். நாடில்லாமல் மக்கள் ஏது?

கவிஞர்: பூமி என்றே தோன்றியது; எனவே நிலமாகத்தான் இருக்கின்றது. மொழியைக் கொண்டு தான் நிலத்தை வகுக்கிறோம் சோசலிசம் என்று பேசிக் கொண்டு அரசாங்கம் சர்வாதிகாரமாக நடக்கின்றது.

எச். எம். பி: சோசலிச நாடா இது? சோசலிசம் இப்போது தான் ஆரம்பிக்கிறது. அரசாங்கம் உணவுப் பொருள் இறக்குமதிக் கூட்டுத்தாபனத்தில் மூன்று முதலாளிகளையல்லவா நியமித்துள்ளது; அத்துடன் சோசலிச நாட்டில் கட்சிகளேது. தலைவர்கள் ஏது? சோசலிச நாட்டில் தலைவர்கள் இருக்க மாட்டார்கள்.'

இப்படிப் பேச்சுக் காரசாரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது சிலர் வந்து நேரமாகின்றது பின்னர் சந்தித்துப் பேசலாம் என்றனர் கவிஞரிடம் கண்டிக்கு ஒலிப்பதிவு செய்யப் போகின்றேன். நேரமாகிவிட்டது. நான் றேடியோ சிலோனில் தான் இருப்பேன் அங்கு வந்தால் என்னேரமும் சந்திக்கலாம் என்று கூறி 'வானில்' ஏறினார் எச். எம். பி.

மலையக எழுத்தாளர் ஒன்று திரண்டு மலையகமேம்பாட்டிற்காக உழைக்க வருங்கால வேலைத் திட்டங்களைத் தீட்டக்கூடிய இம்மாநாடு இப்படிப் பல சர்ச்சைகளையும் கிளப்பிவிடக் காலாக அமைந்தது வருந்தத்தக்கது. சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற பத்து எழுத்தாளர்களும் 25 வயதிற்குட்பட்ட இளைஞர்கள்: அவர்கள் தாம் வாழும் நாட்டிற்கும் பேசும் மொழிக்கும் இடைவிடாது பாடுபடுவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

# தந்தை விடுநூது

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

எப்படி நிறைவேற முடியும்? இதிலிருந்து அவன் கண்கள் கலங்கின. தன் சோகத்தை யாரிடமாவது எடுத்துக் கூறினாற்தான் நிம்மதியேற்படும் என்ற எண்ணம் உண்டாக அவன் அந்த மரக்கிளையை உற்றுநோக்குகிறான்; அந்தக் கிள்ளை அவனையே பார்த்துக் கொண்டிருப்பது போன்ற பிரமை ஏற்படுகின்றது. உடனே தன் துன்பத்தை அந்தப் பறவையிடஞ் சொல்லி மனம் ஆறுகிறான்.

தீம் பலவி னிழலின்கட்
டெரிவையவட் கியானறியேன்
ஆம்பள்மலர் மாலை
யணிந்தேன் மகிழ்ந்தனளால்
சாம்பொழுதும் யான் மறவேன்
தையலவளிக்காலம்
வீம்பான் மறந்தனளோ
வினவாய் பசுங்கிளியே
வீணே புலம்புவதென்
விதியோ பசுங்கிளியே.

சிவகாமி! எனது உடல் இந்த மண்ணோடு மண்ணாகும் வரை என்றால் உன்னை மறக்க முடியாது என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்குகிறது அவன் உள்ளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சி இன்னும் 20 ஆண்டுகள் நீடிப்பின் ஈழத்தில் தமிழினம் வாழ்ந்த கதை வரலாறாகிவிடும்!

(3ம் பக்கத் தொடர்ச்சி)

போது இருந்த அரசியல் அமைப்பு மீண்டும் ஏற்படவேண்டும்; சிங்கள மக்கள் தங்களைத் தாங்களே ஆள்வதுபோல, தமிழ்பேசும் மக்களும் தம்மைத்தாமே ஆண்டிட தமிழரசு அமைக்கப் படவேண்டும்; அதுவே அரசியல் அறநெறியாகும். அதைவிடுத்து, சிங்கள ஏகாதிபத்தியத்தை தமிழர்மீது திணித்து தமிழினத்தின் தனித்துவத்தை அழித்தொழித்திட இன்றைய அரசு நினைப்பது, யூதர்களை அழித்திட ஹிட்லர் முனைந்ததுபோன்ற இனக்கொலை நடவடிக்கையாகும்!

ஆமாம் நண்பா, தமிழினத்தை 'கொலை' செய்திடும் கூரியவாளாகவே அடிப்படைத்தீர்மானங்கள் ஒவ்வொன்றும் இருந்திடுகிறது-தீர்மானங்களை மீண்டும் ஒருமுறை படித்துப்பார்; தெரிந்திடும்!

### செந்தமிழ் 'இலங்கை' இருக்க 'சிறீலங்கா' ஏன?

(1) 'கடல் சூழ் இலங்கை' என்றும், ஈழம் என்றும் மணிபல்லவம் என்றும் செந்தமிழால் வரலாற்றுக்கு மூற்பட்ட காலத்திலிருந்தே அழைக்கப்பட்டு வந்த நாடு இது. இந்நாட்டுக்கு 'ஶ்ரீலங்கா' என்ற சிங்களப் பெயரைச் சூட்டி அதனையே தமிழ்மக்களும் ஏற்றிட வேண்டும் என்று திணிக்கப்படுகிறது! ஆம் ஈழம் ஒரு தனிச் சிங்கள நாடு என்ற கருத்தினை பெயரிலேயே ஏற்படுத்திவிட முனைகிறது அரசு!

### சிங்கள ஏகாதிபத்தியம் தலையெடுக்கிறது

(2) இந்நாடு ஓர் ஒற்றையாட்சிக்குடியரசு ஆக விளங்கும் என்று திட்டவட்டமாக கூறப்பட்டிருப்பதன் மூலம் ஈழத்தமிழினத்தின் தன்னாட்சி உரிமைக்கோரிக்கை மறுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் பேசும் மக்களை நிரந்தர அடிமைகளாக வைத்துக் கொண்டு, சிங்கள மக்களே இந்நாட்டின் நிரந்தர எஜமானர்களாக இருப்பதற்கு ஒற்றையாட்சி அமைப்பு வழி செய்திடுகிறது.

இந்நாட்டு அரசியல் ஆதிக்கம் வெள்ளையர் கையிலிருந்து சிங்களவர்களது கைக்கு மாறிய 1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம் நாளிலிருந்து இன்றுவரை—கடந்த 23 ஆண்டுகளாக தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் ஒற்றையாட்சி அரசியல் முறையின்கீழ் படிப்படியாகப் பறிக்கப்பட்டு இன்று அடிமைகளாக்கப்பட்டுள்ளனர். 1948ம் ஆண்டு ஆங்கில ஆதிக்கம் அகன்றிட்ட நேரத்தில் இந்நாட்டில் தமிழினம் வகித்த பெருமைமிகு இடத்தையும் ஒற்றையாட்சி சிங்கள ஆதிக்கம் ஏற்பட்டு 23 ஆண்டுகள் கழிந்திட்ட பின்னர் இன்றுள்ள அவல நிலையினையும் எண்ணிப் பார்த்திடின், ஒற்றையாட்சி விளைத்திட்ட கேடுகள் புரிந்திடும்!

23 ஆண்டுகால சிங்கள ஒற்றையாட்சியில் தமிழினம் அழிந்திடாது ஓரளவு தப்பிப் பிழைத்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் தமிழரசுக்கட்சியின் தலைமையில் கட்டுப்பாடாக ஆட்சியாளர்களின் தமிழின ஒழிப்பு நடவடிக்கைகளை தமிழ்மக்கள் விழிப்புடனிருந்து மூர்த்தண்ணியமாக எதிர்த்து வருவதுதான்! தமிழ் மக்கள் சிறிது அஜாக்கிரதையானாலும் தமிழினம் அழிக்கப்பட்டுவிடும்!

புதிய அரசியல் அமைப்பிலும் சிங்கள ஒற்றையாட்சி ஏகாதிபத்திய முறையே தமிழ் மக்கள் மீது திணிக்கப்படவிருக்கிறது. தமிழ் பிரதேசங்களை சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்திட—தமிழினத்தின் தனித்துவத்தை பேணிட—தக்கவழி ஏதும் கூறப்படவில்லை ஒற்றையாட்சி அமைப்பில்! எனவே ஒற்றையாட்சி தொடர்ந்தும் நம்மீது திணிக்கப்படுவதை எதிர்த்து போர்க்கொடி உயர்த்திட வேண்டும்; களத்தினில் குதித்திடவேண்டும்!

### தன்னாட்சிக்கு போராடுவோம்

ஒற்றையாட்சி சிங்கள ஆதிக்கம் இன்னும் ஒரு 20 ஆண்டுகளுக்கு நீடித்தால் ஈழத்தில் தமிழினம் வாழ்ந்ததா இல்லையா என்பதைக் கண்டறிய வரலாற்றை புரட்டிடவேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுவிடும் என்பதை ஒவ்வொரு தமிழனும் புரிந்துகொண்டிடவேண்டும்!

தமிழ் பேசும் மக்கள் தமது பிரதேசத்தில் மீண்டும் தன்னாட்சி நிறுவினால் மட்டுமே அழிவிலிருந்து தமிழினம் தப்பிப் பிழைத்திட முடியும் என்பதைப் புரிந்துகொண்டு செயலாற்றிடுவோம்!

### தனிச் சிங்களம் திணிக்கப்படுகிறது

(3) சிங்களம் மட்டுமே ஏகாதிபத்திய மொழியாக நம்மீது திணிக்கப்படவிருக்கிறது புதிய அரசியல் திட்டத்தின் கீழ்! சிங்களம் மட்டும் சட்டத்தினை 1956ம் ஆண்டு கொண்டு வந்து தமிழ் மக்களின் மொழியுரிமைகளைப் பறித்தவர்கள், புதிய அரசியலமைப்பு அமைத்திடும் இற்றைநாளில் தமது கடந்த காலத் தவறுகளைத் திருத்திக்கொண்டிடக் கூடுமெனப் பலர் எதிர்பார்த்தனர்; தமிழுக்கு சம அந்தஸ்து கோரியவர் அரசியல் திட்ட விவகார அமைச்சராக இருப்பதனால் தமிழுக்கும் ஆட்சி மொழியந்தஸ்து கிடைத்திடும் எனச் சிலர் நம்பிக்கை தெரிவித்தனர்; ஆனால் எல்லா நம்பிக்கைகளும் வியர்த்தமாகிவிட்டன. ஏகாதிபத்திய மொழியாக்கப்படுகிறது சிங்களம்—புதிய அரசியலமைப்பின்கீழ்!

### மலட்டுச் சட்டம்!

சிங்களம்மட்டும் ஆட்சிமொழியென்று கூறும் அரசியலமைப்பு தீர்மானத்தில், தமிழ் மக்களாலும், தமிழரசுக் கட்சியினராலும் நிராகரிக்கப்பட்ட 1958ம் ஆண்டின் 28ம் இலக்க தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள், சட்டமும் சேர்க்கப்பட்டிருக்கிறது; இதுவும் தமிழ் மக்களின் கண்களில் மண் தூவிடும் ஏமாற்றுவித்தை!

1966ம் ஆண்டு சனவரி 8ம் நாள் சட்டமாக்கப்பட்ட விசேட விதிகள்தாம் 1958ம் ஆண்டு தமிழ் மொழி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்துக்கு உயிரூட்டுபவையாகவிளங்குகின்றன: இந்த விதிகள் இல்லையேல் 1958ம் ஆண்டு தமிழ் மொழிச் சட்டம் பிரயோசன மற்ற வெறும் முண்டம்! பயனற்ற மலட்டுச் சட்டம்!

தமிழ் மக்களும் தமிழரசுக் கட்சியும் 1966ம் ஆண்டு தமிழ்மொழிச் சட்டவிதிகளை ஓர் இடைக்கால ஏற்பாடாகஏற்றனரே தவிர மொழிப் பிரச்சினைக்கு அதுவே இறுதித் தீர்வாகவல்ல—இதைத் தமிழரசுத் தந்தையே 1966ம் ஆண்டு சனவரி 8ம் நாள் பாராளுமன்றத்தில் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

தமிழுக்கு சிங்களத்துடன் சரியாசனம் வேண்டும்; தமிழ், நாட்டின் தேசிய—ஆட்சி மொழியாக வேண்டும்; இதுவே தமிழ்மக்களின் இறுதி இலட்சியம். இந்த இலட்சியத்துக்காக அவர்கள் கடைசிவரை போராடியே தீருவர்; சிங்களம்மட்டும் சட்டத்தை தமிழ் மக்கள்மீது திணித்திடவும் நாட்டின் ஏகபோக மொழியாக சிங்களத்தை கொண்டுவரவும் வகை செய்கிறது அடிப்படைத் தீர்மானம்: இதை எதிர்த்தும் தமிழுக்கு ஆட்சிமொழி அந்தஸ்து—சிங்களத்துடன் சமமான உரிமை—வழங்கப்படவேண்டுமெனவும் கோரி குரலெழுப்பிடவேண்டும்!

### பௌத்தம் அரசாங்க மதம்!

(4) இந்நாட்டில் ஏனைய மதத்தினருக்கு இல்லாத விசேட சலுகைகள், முக்கியத்துவம், முதலிடம்—பௌத்த மதத்துக்கு வழங்கிட வகை செய்கிறது அடிப்படைத் தீர்மானம்! ஆம், இதை வேறு வார்த்தைகளிற் கூறின் இந்நாட்டில் பெரும்பான்மையினர் மதமான பௌத்தம் அரசாங்க மதமாக்கப் படவிருக்கிறது! அரசாங்கத்தின் விசேட கவனிப்பும் பாதுகாப்பும் பௌத்த மதத்துக்கும் பௌத்த மதத்தினருக்கும் கிடைத்திடவிருக்கிறது!

இது இந்நாட்டில் பௌத்த அரசொன்றை நிறுவிடுதற்கான சூழ்ச்சி! மற்றைய சிறுபான்மை மதத்தவர்களுக்கு இல்லாத பாதுகாப்பு, முதலிடம், முக்கியத்துவம் பௌத்தர்களுக்கு மட்டும் ஏன்? சோசலிச அரசுக்கு இலட்சணம் மத வெறியை ஊட்டுவதா? மற்றமதங்களை ஒதுக்கிடுவதா?

சோசலிச ஆட்சியென்றால் மதசார்பற்ற ஆட்சியாக இருந்திடவேண்டும். இங்கோ சோசலிசம் பேசுவோர் மதத்துவேஷம், மத சார்பு படைத்தவர்களாக இருந்திடும் விசித்திரத்தைக் காண்கிறோம்!

பௌத்த மதத்துக்கு மட்டும் முடிசூட்டுவதை எதிர்த்தும்—ஏனைய மதங்களுக்கும் பௌத்தத்துக்கு தரப்படும் அதேயளவு உரிமைகள் சலுகைகள் தரப்படவேண்டுமென கோரியும் ஏனைய சிறுபான்மை மதத்தவர்கள் குமுறியெழுந்திடவேண்டும்!!

### நீதிமன்ற மொழியும் சிங்களமாம்!

(5) தமிழ்பேசும் பிரதேசங்களிலுள்ள நீதிமன்றங்களில் தமிழே நீதிமன்ற மொழியாகவேண்டுமென தமிழ்பேசும் மக்கள் கட்சி வேறுபாடின்றி விடுத்துவந்த கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது இன்று! (வடக்கு கிழக்கு மாகாணங்களுட்பட) இலங் முழுவதும் சிங்களமே நீதிமன்ற மொழியாக இருக்கும் என்று 23வது அடிப்படைத் தீர்மானம் மிகவும் தெளிவாகக் கூறுகிறது. 'நீதிமன்றங்களிலும் நியாய சபைகளிலும், கையாளப்படும் வழக்குரைகள், நீதி மன்ற நடவடிக்கைகள் தீர்ப்புக்கள், கட்டளைகள் என்பவையும் நீதி முறைச்செயல்கள், சட்டநிறைவேற்றம் சார்ந்த செயல்கள் என்பன பற்றிய பதிவேடுகள் சிங்கள மொழியிலேயே இருத்தல் வேண்டும்.'

இப்படிக் கூறப்பட்டுள்ள தீர்மானத்தில் [illegible] த்திட பின் வரும் வாசகமும் சேர்க்கப்பட்டுள்ளது:

''எனினும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலே ஏதேனும்கிராம நீதிமன்றம், விண்ணப்ப நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம், அல்லது மாவட்ட நீதிமன்றம் (இதிலும் உயர் நீதிமன்றம் சேர்க்கப்படவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது) ஒன்றின் விடயத்திலே தேசிய சபை தனது சட்டத்தினால் அல்லது அதன் பிரகாரம் வேறு விதமான ஏற்பாடுகள் செய்யலாம்''

நண்பா, இது நீதிமன்றமொழிப் பிரச்சினையில் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பைத் தணித்திட போடப்பட்டிருக்கும் ஒரு வாசகம்! இதில் நம்பிக்கை வைத்து ஏமாந்திட தமிழினத்தார் என்ன அவ்வளவு பேயர்களா? நன்றாக கவனித்துக் கொள் நண்பா,

தேசிய சபை விரும்பினால் வடக்கு, கிழக்கிலுள்ள ஏதாவது ஒரு நீதி மன்றத்தின் விடயத்தில் வேறுவிதமானஏற்பாடுகள் செய்யலாமாம்!

நீதிமன்ற மொழிப் பிரச்சினையில் ''தேசிய சபை வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏதாவது ஒரு நீதிமன்றத்தில் வேறு ஏற்பாடுகள் செய்யும்வரை'' தமிழினம் காத்திருக்கமுடியாது! அதுவும் நண்பா நன்றாக குறித்துவைத்துக்கொள்—தமிழில் நடத்த அனுமதியளிக்கும் என்றுகூட கூறவில்லை; வேறு ஏற்பாடுகள் செய்யப்படுமாம்; அதுவும் தேசிய சபை விரும்பினால் மட்டும்தானாம்; அதுவும் ஏதாவது குறிப்பிட்ட ஒரு நீதிமன்றத்தில்!

இதையும் நாம் நம்பவேண்டுமாம்— சோசலிசத்தின் பெயரால்...!

தேசிய சபை வானத்திலிருந்து புதிதாக இறங்கி வரப்போகும் ஒன்றா? இப்போதுள்ள சனப்பிரதிநிதிகள் சபைதானே தேசிய சபையாக பெயர்மாறவிருக்கிறது! வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழை நீதிமன்ற மொழியாக்கிட இன்று மறுக்கும் இதே ஆட்சியாளர்களுக்கு தேசிய சபையாக மாறியவுடன் அப்படி தாராள சிந்தை இரவோடிரவாக வந்திடப் போகிறதா?

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல நீதிமன்றங்களிலும், தமிழ் நீதிமன்ற மொழியாக வேண்டும்; ஏதேனும் ஒன்றில் 'சாட்டுக்கு' இடந்தந்திடின் அது கண்டு நாம் திருப்தியடைந்துவிட மாட்டோம்!

தமிழ் பேசும் மக்கள் நீதிமன்ற மொழிப் பிரச்சினையில் சிங்களத்தை எதிர்த்து கடும் எதிர்ப்புக் காட்டிடின் வேறு வழியில்லையென்றநிலை தோன்றும்போது வடக்கு, கிழக்கிலுள்ள குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நீதிமன்றத்தில் ஆங்கிலத்தை நீடிப்பது; அல்லது தமிழுக்கு இடந்தருவது என்பதுதான் அரசாங்கத்தின் திட்டமாகும்!

நம்முடைய நிலை—வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல நீதிமன்றங்களிலும், நியாய சபைகளிலும், கையாளப்படும் வழக்குரைகள், நீதிமன்ற நடவடிக்கைகள், தீர்ப்புக்கள் கட்டளை என்பனவும்; நீதிமுறைச் செயல்கள் சட்ட நிறைவேற்றம் சார்ந்த செயல்கள் என்பன பற்றிய பதிவேடுகள் உட்பட சகலபதிவேடுகளும் தமிழில் இருக்கவேண்டும். இதில் இம்மியளவும் விட்டுக் கொடுத்திடமாட்டோம்; தமிழுக்கு இவ்வுரிமையைத்தர மறுத்திடின், தந்தை செல்வா கூறியபடி புரட்சி நடத்திடவும் தயங்கமாட்டோம் என தமிழ் இளைஞர்கள் சபதமேற்றுக்கொள்ளவேண்டும்-

இதுமட்டுமல்ல நண்பா, 'தேசிய சபை' நிறைவேற்றிடும் அநீதியான சட்டங்களை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்காடவும் முடியாத சனநாயக விரோதமான நிலையை தோற்றுவித்திட வழிவகுத்திடுகிறது அடிப்படைத் தீர்மானம்!

### தீயிலிடுவோம்

அரசியல் நிர்ணய சபையில் இந்த அநீதியான அடிப்படைத் தீர்மானங்களுக்கு தமிழ் பேசும் மக்களின் உணர்ச்சிகளை எடுத்துக் காட்டிடும் வகையில் ஏற்ற திருத்தங்களை தமிழரசுக் கட்சி கொண்டுவரவிருக்கிறது! இத்திருத்தத் தீர்மானங்கள் ஏற்கப்படுமென்ற நம்பிக்கையில்லாவிடினும், இதனால் உலகத்தின் கண்களில் நமது நியாயமான கோரிக்கை தெரிந்திடச் செய்யலாமன்றோ!

தமிழினத்துக்கு சவக்குழி தோண்டிடும் புது அரசியலமைப்புத் திட்டத்தினை தீயிலிடவும் இன விடுதலைக்கு களமமைத்து போராடிடவும் வேண்டிய நேரம் நெருங்கிவருகிறது. தயாராக இரு!

உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


வெற்றிகரமான 125வது நாள்

'ஜெயந்தியின்' 'மாட்டுக்காரவேலன்'

சென்ட்ரல் (மருதானை) ராஜேஸ்வரா (மட்டுநகர்) ஒடியன் (கண்டி)

* 'புரட்சிநடிகர்' எம். ஜி. ஆர்.
* ஜெயலலிதா * சோ * அசோகன்
நடித்த

'ஜெயந்தி பிலிம்ஸ்'

மாட்டுக்கார வேலன்

(ஈஸ்ட்மென் கலர்)

டைரக்ஷன்: ப. நீலகண்டன் இசை: கே. வி. மகாதேவன்

ஜனவரி 28ம் திகதி முதல்

சென்ட்ரல் (மருதானை) ஜெஸீமா (கிராண்ட்பாஸ்) ராணி (யாழ்நகர்)

* 'நடிகர்திலகம்' சிவாஜிகணேஷன்
* ஜெயலலிதா * பாலாஜி * நாகேஷ்
* சச்சு மற்றும் பலர் நடித்த

'சுஜாத்தாவின்'

'எங்கிருந்தோ வந்தாள்'

(ஈஸ்ட்மென் கலர்)

இசை: எஸ். விஸ்வநாதன், டைரக்ஷன் ஏ. சி. திருலோகச்சந்தர் (M. A.)

தமிழ் திரையுலக இரண்டாவது வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்திய மாபெரும் சித்திரம்
இப்பொழுது அமோக வெற்றியுடன் காட்சியளிக்கிறது



கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்)

* நடிகர்திலகம் சிவாஜிகணேசன் * காஞ்சனா
★ எம். என். நம்பியார்
★ நாகேஸ்
★ எஸ். வி. ரங்கராவ்
—நடித்த—

ஸ்ரீதரின்

சிவந்த மண்

ஈஸ்ட்மென் கலர்

இதுகதையல்ல! காவியமல்ல! தாய் நாட்டை அந்நியனுக்கே விலைபேசிய ஒரு துரோகியின் ஆட்சியை ஒழித்து மக்களாட்சி மலரச் செய்த ஒரு புரட்சி வீரனின் வெற்றி வரலாறு!

கதை - வசனம் - டைரக்ஷன்
ஸ்ரீதர்

இப்பொழுது காட்சியளிக்கிறது கிங்ஸ்லி
விஜயன் ஜெயலலிதா —நடித்த—
ஸி. ஐ டி. 116

நானு விளையாட்டுப்பிள்ளை—ஆண்டவனே ஒரு விளையாட்டுப்பிள்ளைதானே இல்லையேல்
பேதை முத்தையாவின் (நடிகர் திலகம் சிவாஜிகணேசன்) வாழ்வில்தான்
எத்தனை திருப்பங்கள்—கவலைகள்—சந்தேகங்கள்

3வது வாரம் செல்லமகால்
மற்றும் இம்பீரியல் (மட்டுநகர்) ஆகிய திரைகளில்
காட்சியளிக்கும்
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடி வெற்றியீட்டியது
* நடிப்புக்கு இலக்கணம் வகுத்த
சிவாஜிகணேசன்
* சிம்மக் குரலோனுக்கு ஈடுகொடுத்து
நடிக்கும் நாட்டியப் பேரொளி
பத்மினி —நடித்த—

★ மாட்டுச் சண்டைகள் ★ சிலம்புச் சண்டைகள் ★ மாட்டு வண்டிச் சவாரி
நிறைந்த ஈஸ்ட்மென் வர்ணப் படம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் தொரபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1971 ம் வருடம் ஜனவரி மாதம் 26-ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது. —ஆசிரியர்: கோவைமகேசன்